திராவிடநாடு

9—9—62 | வாரவெளியீடு

விடுதலை பெற்றிடுவோம்!

கவி. க. அகிலன்

அங்கம்சிதைந்தாலும் எங்களுயிர்ப்பாட்டு விடுதலை யாகுமன்றோ
—அதுவே பனங்கட்டி யாகுமன்றோ

சங்கத்தமிழ்காக்கத் தங்களுயிர்நீக்கும் தனயரின் கூட்டமன்றோ
—கையில் கணைகளின் ஈட்டமன்றோ

மங்கிவருகின்ற உங்களாட்சியினித் தேய்ந்திடும் நேரமன்றோ
—அதுதான் மாய்ந்திடும் ஓரமன்றோ

பொங்கியெழுகின்ற எங்களுயிர்மூச்சுப் போர்க்குரல்
ஆகுமுன்னே—நாட்டை நீர்தரல் நியாயமண்ணே
(அங்கம்)

அண்டமிரண்டாகி மண்டையுருண்டிடினும் அஞ்சுதல் இல்லை,
கண்டீர்—என்றும் கெஞ்சுதல் இல்லை, கண்டீர்

பண்டைத்தமிழ்வீரம் குண்டைவிடமீறும் பாங்குடன் இருந்திடுவீர்
—நாட்டை நீங்களே தந்திடுவீர்

துள்ளியெழுகின்ற நல்லதமிழ்வீரர் துஞ்சிட மாட்டரண்ணே
—எதற்கும் அஞ்சிட மாட்டரண்ணே

பள்ளிப்படிப்பாகச் சொல்லித்துடிக்கின்ற திராவிட வீரரண்ணே
—நாட்டைத் திருப்பிட வாராரண்ணே!
(அங்கம்)

[redacted]வகை என்றேன் நான்!
பொய்கை என்றார் அவர்!!

ந. இறைவன், பி. ஏ.

என்னடி தோழி உன் தலைவன் வந்தானா? வந்தவன் கனியிதழில் ஏதேனும் தந்தானா? தந்தவன் கனியிதழில் ஏதேனும் உண்டானா?

ஏன் தலைவி! இவையெல்லாம்! உன் தலைவன் வந்தானா? வந்தவன் கனியிதழில் ஏதேனும் தந்தானா? உண்டானா? என்று என்னை நீங்கள் கேட்கவும்; இல்லையே தலைவியென நான் சொல்லவும்; சொல்லியபின் உன் தலைவன் வந்தானா என்று நான் கேட்கவும்; வந்தான் என்பதை வாய்மொழியால் சொல்லாமல் வாள் விழியால் காட்டவும்; கண்ணல்ல என் தலைவி நீயென்று நான் கொஞ்சியபின், வந்தவன் கனியிதழில் என்னென்னவெல்லாம் எடுத்தெடுத்து உண்டான் என வினவ; நீயதற்கு, அவன் எனக்குக் கனியிதழில் தந்தனவும் உண்டனவும், நான் உனக்குக் கன்னித் தமிழ் குழைத்துத் தரத்தாண்டி வந்தேன் என உரைக்கக் கேட்ட நான், மெள்ள ஊடி; அவன் உனக்குத் தந்ததைத் தான் தீந்தமிழில் தருவாயோ? நீ அவனுக்குத் தந்ததையும், தந்த முறையினையும் அழகு தமிழ் குழைத்துத் தரமாட்டாயோ என வினவி நிற்க! இல்லையடி இல்லை! அதையுந்தாண்டி உனக்கு தரப் போகிறேன் எனச் சொல்ல! அப்படியானால் விரைவாகச் சொல்லுங்கள் என்று நான் வேண்ட, பின்னர்தான் நீ நிகழ்ந்ததைச் சொல்ல வேண்டுமா?

இவையெல்லாம் விடுத்து, அவன் வந்தான் என்று தொடங்கி, அவன் சென்றான் என்று முடிக்கும்வரை என் பேச்சை நடு நடுவே இழுக்காமல் அவன் படைத்த காதல் இலக்கியத்தை நீ படைக்கவேண்டுகிறேன். வாயில்லாப் பூச்சியாகி நின் காதல் காவியத்தால் செவியின்பம் பெறவும் நினைக்கின்றேன்.

நின் ஆணைக்குத் தலைதாழ்த்திச் சொல்கிறேன் கேளடி! முல்லைக் கொடி முகிழ்த்த நறும் அரும்பின் முறுவலினைத் தன் குறுநகையால் வெற்றி கொள்ளும் கிள்ளைமொழிக் கன்னியர்கள் வாய்மணக்கப் புகழ் பாடும் அவர் வருகையை; மின் பூத்த வானை அழகு செய்யவரும் ஒளிபூத்த தண்ணிலவில் கண் பூத்துப் போகும்வரை பார்த்திருந்தேன்!

தனிமையிலா தலைவி!

இல்லையடி இல்லை! நான் மட்டும் காத்திருக்கவில்லை! மலர் பூத்து மணம் பூத்த காவினிலே அழகோடு அகம் பூத்த கன்னியர்கள் ஆங்காங்கே நடைபயின்று; வீர ஒளி பூத்த காதலர்தம் முகத்தோடு முகம் பூத்தும், அகத்தோடு அகம் பூத்தும் சிரிப்பதற்குக் காத்துக்கிடந்தனர்.

மின்பூத்த வானை மேற்பார்வையிடும் நிலவினைப்போல் பூவோடும் மணத்தோடும் கன்னியரும் பூத்திருந்த காவினிலே காதலர்கள் நுழைவார்கள். இணையைஅணைத்து எழில் கொஞ்ச நடப்பார்கள். நானோ என் துணைஇன்றி ஏங்கிக்கிடப்பேன்.

நெடுநேரம் சென்றதன்பின் அடலேறு அவர் வந்தார்! ஊட நினைத்து இமையை மூடி நடந்தேன்! வரும் வரை திட்டிய வாய், வருக வருகவென வாழ்த்துரைக்கத் துடிக்கும். வரும்வரை வாடிய இதழ்கள் வந்ததும் தாவென அவரைக் கேட்கத் துடிக்கும்.

வந்தவர் கண்ணல்ல நீ என்றார்! நானோ கண்ணிமையைத் திறவாமல் நின்றேன்!

வண்ணக் குழம்பெடுத்து எண்ணத்தில் மிதந்துவரும் பண்பாடும் யாழே படைக்கவோ உனை என்றார்!

கிண்ணத்தின் வண்ணத்தை மண்ணிலே சாய்த்துவிட்டு, வண்ணத்தால் படைத்தால் நான் வாழேன் நெடுநாளென்று, என் எண்ணத்தின் வண்ணத்தால் எனை எழுது என்பாள்போல் நின்றேன் நான்.

எண்ணமெனும் வண்ணத்தை இதயமெனும் கிண்ணத்தில் வற்றாக் கடலாக்கி வடிவழகே உன்னை நான் வடிக்கவோ எனக்கேட்டார்.

'இம்' என்பாள்போல் இதழ் நெளியும் சிரிப்பொன்றைத் தந்தேன்! வடிவழகன் நெடுநேரம் என் வாள் விழியைப் பார்த்திருந்தார். வாள் விழியே! வடிவழகே! தாள்பார்க்கும் நின் வாள்விழிக்கு என்தோளென்றால் தேனாமோ எனக்கேட்டார்.

இல்லை என்றேன். ஏனென்று கேட்பார் என நினைந்தேன். ஏனென்று கேளாமல்; தேனிற்கும் மேலான என் தோளைத் தேனென்றால் நீ ஒப்புவையோ எனக்கேட்டுச் சிரித்தார்.

ஆம் என்பாள்போல் அவர் சிரிப்பிற்கு நானோர் பதில் சிரிப்புச் சிரித்தேன்.

தோள் விழியே என்றழைத்தார் என்னை. என்ன தோள்விழியா என்று இடைமறித்தேன் அவரை! ஆம் தோள்விழிதான் என்றார் விளக்கம் தந்து.

என்ன விளக்கம் தந்தார் தோழி!

கோதையர்கள் விழியின் வடிவங்கொண்டு அதனை வாள்விழி என்றார்கள் கவிஞர்கள். இதன் தொழில் கொண்டு நானிதனைத் தோள்விழி என்கின்றேன் என்றாரவர் என் விழியைக்காட்டி.

போதும்போதும் உங்கள் புதுமை விளக்கங்கள். கூடலின் பெருமையைப்பற்றிச் சொல்கின்றேன், சொல்கின்றேன் என்று பல நாட்களாக ஏமாற்றி வருகிறீர்களே ......அதை இன்றேனும்......என்று நிறுத்தினேன்.

அதற்கு அவர், கூடல் இன்பத்தைக் கவிதையிலே வடியுங்கள் வடியுங்கள் என வேண்டி, வடித்து வந்த கவிதைகளை என்முன் படியுங்கள் படியுங்கள் என்பாயே! நீ விரும்பி விரும்பி வேண்டிய அந்தக் கூடலின்பத்தின் பெருமையைத் தனிமையில் எண்ணி எண்ணி இன்பம் தரும் சொல்பலவும் சேர்த்துச் சேர்த்துக் கவிதையாக்கி வந்தேன் உன்னிடம் சுவை சொட்டச் சொட்டச் சொல்லவேண்டும் என்ற நினைவோடு. நீயோ ஊடிக்கிடக்கின்றாய், கூடலின்பம் வேண்டாம் என்பாள் போல். உன் ஊடலினைப் பார்த்ததும், கூடல் இன்பத்தைத் தேடி வந்த என் கண்களும்; ஓடிவந்த கால்களும் நாடிவந்த கைகளும் பாடிவந்த நெஞ்சும் வாடிக்கிடக்கின்றன. வண்ணக்கவிதையும் மறந்தே போயின என முடித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

"தேசிய ஒருமைப்பாடு"

ர் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (9—9—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 2

"தேசிய ஒருமைப்பாடு!" இது இப்பொழுது ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துப் பலருடைய மண்டை (மூளை)யைக் குழப்பிக்கொண்டிருக்கிறது.

இப்படிக் குழப்பத்திற்கு ஆளாகி இருப்பவர்கள் முதலில் முக்கியமான ஒன்றை மறந்துவிட்டார்கள் என்றே கூறவேண்டியிருக்கிறது.

தேசம் — ஒருமை; தேசிய ஒருமை; இதனைத் தொடர்ந்து தேசிய ஒருமைப்பாடு உருவாகியுள்ளது.

முதலில் "தேசம்" என்றால் இவர்கள் எந்தத் தேசத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்பது தெரியவேண்டும்—தெரிவிக்கப்படவேண்டும்.

ஆங்கிலேயன் ஆளுகைக்கு முன்பிருந்த தேசத்தையா? அல்லது அவன் காலத்திலிருந்த தேசத்தையா? என்பது விளக்கப்படவேண்டும்.

ஆங்கிலேயன் காலத்திற்கு முன்பிருந்த தேசம் என்றால், அக்காலத்தில் அது ஒரு தேசமாக இருந்ததில்லை. இது வரலாறு கூறும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

ஆங்கிலேயன் காலத்துத் தேசம் என்றால், அதை, அவன் ஆள்வதற்கு வசதியாக ஏற்படுத்திக்கொண்ட—எல்லா நாடுகளையும் ஒன்றாக்கிக்கொண்ட ஒரு போலித் தேசமாகும்.

இந்த இரண்டு தேசங்களில் எந்தத் தேசத்தின் ஒருமைப்பாட்டை இவர்கள் பேணிக்காக்கப் பாடுபடுகிறார்கள் என்பது தெரியவில்லை.

ஆங்கிலேயன் காலத்துக்கு முன் இருந்த தேசம் என்றால்,—அது, அவன் காலத்துக்கு முன் ஒரு தேசமாக—ஒருவரின் ஆளுகையில் அடங்கி இருந்ததில்லை.

ஆங்கிலேயன் காலத்துத் தேசம் என்றால், அது, அந்த ஆங்கிலேயனே ஆண்டுவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டு வாளா இருந்திருக்கலாமே!

ஆங்கிலேயனின் அநியாய அடக்குமுறை ஆட்சியைக் கண்டு, அவன் ஆட்சியால் ஏற்படும் கொடுமைகளை உணர்ந்துதானே காந்தியடிகள் போன்ற பெரியவர்கள் அவனைத் துரத்தினர்—அறப்போர் முறைகளைக் கையாண்டு.

ஆங்கிலேயன் போனபின், அவன் கட்டிவைத்த **போலித் தேசத்தை,** இதுதான் தேசம் என்று சொல்லிக்கொண்டு, இதில் ஒருமைப்பாடு காண முயன்றால், இம் முயற்சியை அறிவுடையோர் கேலிக் கூத்தென்றுதானே கூறுவர்,

ஆங்கிலேயன், அந்நியன்; அவன் தன்னுடைய ஆட்சி வசதிக்காகத் தனக்கு இயல்பாகவே அமைந்துள்ள தந்திர பலத்தையும், ஆயுத பலத்தையும் பயன்படுத்தி, இத் துணைக்கண்டத்தை—பற்பல பிரிவுகளாக—நாடுகளாக இருந்து ஒழுங்கான முறையில் இயங்கி வந்த ஒரு அமைப்பை ஒரு தேசமாக்கி ஆண்டு வந்தான்.

இப்பொழுது தேசிய ஒருமைப்பாடு காண வந்திருப்பவர்கள், அந்த ஆங்கிலேயன் சென்ற பாதையில் செல்லவே இந்த முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள் என்பதை உணரமுடியாதவர்கள் இன்றும் இங்கு இருக்கிறார்களே என்றுதான் கூறி இரங்கவேண்டியிருக்கிறது.

அதிலும், இவர்கள் இப்போது கூறும் தேசம் எது என்பதை இவர்களாலேயே இன்னும் முடிவுகட்ட முடியாத இரங்கத்தக்க நிலையில் இருக்கிறார்கள்.

இவர்களால் ஆளப்படும் தேசம், இந்தியாவா? அல்லது பாரதமா? என்பது தெரியவேண்டும். ஒரு தேசத்துக்கு ஒரு பெயர்தானே இருத்தல் வேண்டும்! ஒரு தேசத்தை இரண்டு பெயர்களால் ஏன் அழைத்தல் வேண்டும்?

எழுத்தில் இந்தியா! பேச்சில் பாரதம்!

ஏன் இந்த இரண்டும் கெட்டான் நிலை?

இதிலிருந்து தெரியவில்லையா, நாவலந் தீவு என்று அழைக்கப்பட்டு வந்த இத்துணைக் கண்டம் என்றைக்கும் ஒன்றாக—ஒரு நாடாக—ஒருவரின் ஆளுகையில் இருந்ததில்லை — இருக்கவும் முடியாது என்ற வெள்ளிடை மலை போன்ற பேருண்மை.

பாவம், அங்கிலேயன் வழி செல்ல முனையும் இவர்களின் போக்கு மிகமிக இரங்கத்தக்கதாகவே உள்ளது.

ஆங்கிலேயனை — அவனது கொடுங்கோலாட்சி பொறுக்கமுடியாமல் விரட்டிவிட்டு, இவர்கள் அவன் சென்ற ஆகாத பாதையில் செல்வது அறிவுடைமையுமாகாது—அரசியல் தெளிவுமாகாது.

முதலில், இவர்கள் இந்தியாவை ஆளுகிறார்களா? பாரதத்தை ஆளுகிறார்களா என்பதில் இவர்களுக்கே ஒரு தெளிவும், முடிவும் ஏற்படட்டும்.

முதலுக்கே மோசம் என்ற நிலை இருக்கும்போது இலாபக்கணக்குப் பார்ப்பதா?

... பக்கத் தொடர்ச்சி

ஊடலுமில்லை ஒன்றுமில்லை. நீங்கள் சொல்லுங்கள் கூடலின் பெருமையைப்பற்றி என்று நெருங்கினேன்.

ஊடல் இல்லை என்று சொல்லி விட்டால் போதுமா? ஒருஅடி இடைவெளி நமக்குள்ளே இருத்தல் தகுமா? நெருக்கத்தை குறை நீ! நிகழ்ச்சியைத் தொடர்கின்றேன் நான் என்றார்.

இன்னும் அருகில்போய் அமர்ந்தேன். இது போதாது என்று சொல்லித், தென்றலும் இடைபுகாத வாறு நெருக்கம் அதிகமானால் அன்றோ, ஒன்றன்றோ இவ்வுடல்கள் என்றெண்ணி ஓடிவரும் தென்றலும் ஒதுங்கி நடைபயிலும் என்றார் சிரிக்காமல் இமைக்காமல்!

பிறகு என்ன செய்தாரோ?

அத்தனையும் சொல்லவேண்டுமோ தோழி?

அத்தனையும் சொல்ல வேண்டுமா என்று கேள்வி வேறா? எள் நுனியளவும் குறைக்காமல் சொல்ல வேண்டும்.

கள்வராயிற்றே நீங்கள்என்றேன் சிரித்தபடி! கள்ளியாயிற்றே நீ என்றார் அணைத்தபடி! வீரத்தின் விளைநிலமே இது என்றேன் அவர் முகத்தைப் பார்த்தபடி! விலையில்லாக் கலையின் விளை நிலமே இது என்றார் என் முகத்தைப் பார்த்தபடி! குன்றன்றோ இது என்றேன் அவர் மார்பில் தவழ்ந்தபடி! கொடியன்றோ இது என்றார் என் இடையை வளைத்தபடி! கரும்பன்றோ இது என்றேன் அவர் இதழைத் தொட்டபடி! கனியன்றோ இது என்றார் என் இதழை சுவைத்தபடி! ஓவியந்தான் நம்நிலை என்றேன் நான் அவர் தந்தவற்றை உண்டபடி! காவியமே நம்வாழ்வு என்றார் அவர் நான் தந்ததை உண்டபடி!

நெடுநேரம் சென்றதன்பின்; காலை கலை பயின்ற களை தெளிந்து நிலையுணர்ந்தோம். அவரை நெஞ்சோடு அணைத்து; கூடலின் பெருமையைச் சொல்லப் போகிறீர்களா? இல்லை நான் இங்கிருந்து போக விடை தருகிறீர்களா எனச் சினத்தோடு வினவினேன்.

அதற்குள் ஊடலா? விடு விடு! ஊடலின் நினைவை விடு! கூடலின் பெருமையைக் கேளென்று சொல்லிக், கூடலுக்குச் சிறப்பு வைகை என்பார் பெண்கள்! கூடலுக்கு சிறப்பு பொய்கை என்பார் ஆண்கள்'' என்றார்.

கூடலின்பத்தின் பெருமையைச் சொல்லுங்கள் என்றால் கூடல் நகரின் பெருமையைப் பற்றிச் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கின்றீர்களே எனக் கோபங்கொண்டேன் நான்.

கூடலின் சிறப்பினைப் பற்றித் தான் நான் சொன்னேன். நீ எப்படி அதைக் கூடல் நகரின் சிறப்பென்றாய் என்று என்னையே கேட்டார் அவர்.

கொத்து மலர் கொடிகள் தூவிய மலரினையும்; தித்திக்கும் கனி கொண்ட மரங்கள் உதிர்த்த கனிகளையும் வாரிவரும் வைகை நதி கூடல் நகர் அருகே வருவதால்தான் மதுரைக்குச் சிறப்பு என்பார் பெண்கள் என்பதைத்தான் நீங்கள் "கூடலுக்கு சிறப்பு வைகை என்பார்கள் பெண்கள் என்றீர்கள்' என்றேன்.

பொய்கை என்பதற்கு என்ன விளக்கமோ என்றார் அவர்,

அறம் வாழத் தன் மெய் கையை இழந்து பொய்க்கையாய் பொன்கையைப் பெற்ற 'பொற்கைப் பாண்டியனின்' வரலாற்றுச் சிறப்பால்தான் மதுரைக்கு சிறப்பு என்பதனைத் தான் நீங்கள் "கூடலுக்குச் சிறப்பு பொய்கைதான் என்பார்கள் ஆண்கள்'' என்றீர்கள் என்றேன் நான்.

நான் கூடலின்பத்தின் பெருமையைத்தான் சொன்னேன் என்றார் அவர் மீண்டும்.

பொய்! பொய்! ஏமாற்றப் பார்க்கிறீர்கள் என்றேன் நான். மெய்! மெய்! நான் சொன்னது மெய்யே என்று சொல்லி விளக்கம் தந்தார்.

நான் முதல் முதலிலே சந்தித்த போது...... நீ என்னைப் பார்த்துப் பேச நாணி; முகத்திலே கைவைத்துக் கண்களை மூடிக்கொண்டதும்; பார்க்கத் துடிக்கும் கண்களைப் பாவையே நீ ஏன் கைகொண்டு மூடுகிறாய் எனக் கேட்டு அருகே வந்து கையை விலக்கவிட்டு; நமக்குள் எதற்கு இந்த நாணமெல்லாம் என்று நான் கேட்க; நீ நாணிக் கோணி நெளிந்து குழைந்து; போங்கள் அத்தான், ஒரே வெட்கமாக இருக்கிறது என்று குழந்தைபோல் குழைந்து, கடைக்கண்ணால் எனைப் பார்க்க, மீண்டும் நாணம் நினைச் சூழ; மீண்டும் நீ கைவைத்து முகம் மூட; நான் அதனை விலக்க முயன்று முடியாமல் போக; நான் நின் பொல்லாத கைகளைத் தூற்றி விலகிவிட்டேனே நினைவிருக்கிறதா? என்றார் அவர்.

நன்றாக நினைவிருக்கிறதே என்றேன் நான்.

பெண்களுக்குச் சிறப்பு நாணம். நாணம் இல்லை என்றால் ஊடலுமில்லை கூடலுமில்லை. நாணம் வரும் போது காதலி காதலனைப் பார்க்க நாணித் தன் முகத்தைக் கை வைத்து மறைத்துக் கொள்வாள். முகத்திலே வைக்கின்ற கைகளை அகற்றுவதற்கு ஆண்கள் படும்பாட்டிலேதான் கூடலின் இன்பம் இருக்கிறது என்பார்கள் பெண்கள் என்பதை நான் இலக்கியத்தில் படித்த நினைவு வந்தது. அந்த நினைவு என் உள்ளத் திரையில் தோன்றவேதான் மீண்டும் ஓடிவந்தேன். உன் கைகளை விலக்கினேன். நாம் கூடல் இன்பத்தைப் பெற்றோம் இல்லையா என்றேன்.

நாணத்தைக் காட்ட முகத்திலே வைக்கின்ற கையை ஆண்கள் விலக்கப் படும்பாடுதான் கூடலின் சிறப்பாகக் கொள்வார்கள் பெண்கள் என்பதைத்தான் நான் "கூடலுக்கு சிறப்பு 'வை' 'கை' என்பார் பெண்கள்'' என்றேன் என்றார்.

கூடலின் சிறப்பு பொய்கை என்பர் ஆண்கள் என்றீர்களே, அதற்கென்ன பொருளாம் என்றேன் நான்.

நாணத்தால் முகத்திலே வைத்த கைகள் காதலனைக் காணவேண்டும் என்றஆசைக்குஅடிமையாகித், திருட்டுத்தனமாகக் காதலனைப் பார்க்க வழிசெய்யும். மெய்யாகவே அவள் முகத்திலே கை இருந்தாலும் விரல் இடுக்குகள் அவள் கையை 'பொய்'கையாக்கிக் காதலனைப் பார்க்க வழி செய்யும். வைகை இங்கே பொய்கையாக மாறுகிறது. ஆசை வை கையைத் பொய் கையாக மாற்றுகிறது. ஆசை வை கையைப் பொய் கையாக மாற்றி விடுவதால் கூடலின்பம் பெருகுகிறது. பொய்கை கூடலின்பத்தைப் பெருக்க உதவுவதால்தான் 'ஆண்கள் கூடலுக்குச் சிறப்பு பொய் கை என்பார்கள்' என்றேன் நான் என்றார்.

எடுத்தெனை ஆள்க என்றே இயம்பிடும் சொற்கள் தம்மை; வகுத்தே நான் ஆள்வேன் என்று வரிசையில் நிறுத்தி வைத்து; வான் மழை பொழிவதேபோல், தேன்கூடு தமிழில் கட்டும் தென்றலவர் அடி பணிந்தேன்.

(16-ம் பக்கம் பார்க்க)

மக்கட் பாடகன்

[கனகு]

அந்த இடம் என்னவோ நெடுஞ்சாலையை ஒட்டித்தான் இருக்கின்றது. சின்னஞ்சிறு திடல். எந்தக் காலத்திலும் அங்கே ஆள்நடமாட்டம் அதிகமிருந்தது கிடையாது. ஆனால், இன்று அங்கே ஒரே கூட்டமாக இருக்கிறதே! ஏன்? திடல்கொள்ளாத கூட்டம். திடல் வழிந்து, மக்கள், சாலையின்நடுவிலுமல்லவா குழுமி நிற்கிறார்கள். போக்குவரத்துக்கே இடைஞ்சலாக அல்லவா கூட்டம் நிற்கிறது! ஏதேனும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறதா? பெருந்தலைவர் யாரேனும் வந்து பேசவிருக்கிறார்களா? அப்படியிருந்தால் அறிக்கைகள்விட்டிருப்பார்களே! சுவரொட்டிகள் போட்டிருப்பார்களே! அப்படியொன்றையும் இன்று காலைவரையிற் காணவில்லையே! நான் இந்தப் பகுதியில் நிரந்தரமாகப் புழங்கிக்கொண்டிருப்பவன். வெளியூர் என்றுகூட நான் கடந்த பத்து நாட்களாகப் போகவில்லையே! அதுவும் பொதுக்கூட்டம் பொது நிகழ்ச்சிகள் என்றால் சற்று உன்னிப்பாக நான் கவனிப்பவன். முன்னறிவிப்போடு அப்படி ஏதேனும் நடப்பதாயிருந்தால் எனக்குத் தெரியாமலிருக்க வழியில்லையே! சரி, அந்தக் கூட்டம் என்னவென்றுதான் சற்று அருகிற் போய்ப் பார்ப்போமே!'

நான் அந்தக் கூட்டம் குழுமிநிற்கும் இடத்தை நோக்கி நடந்தேன். சாலைக்குச் சற்றே எட்டி, யார்மீதிலும் நான் மோதிக்கொள்ளாமலும், யாரும் வந்து என்மீது மோதிக்கொண்டுவிடாமலும் நிற்கக்கூடிய ஓரிடத்தில்—சற்று மேடான இடத்தில்—நான் நிற்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. எல்லாருடைய பார்வையும் படிந்துகிடந்தபக்கம் என் பார்வையும் சென்றது.

அங்கே ஒருவன் சற்று உயரமான கல் மேடையொன்றில் உட்கார்ந்திருந்தான். அவன் உட்கார்ந்திருந்ததால் அவன் முழு உருவையும் என்னால் பார்க்கமுடியவில்லை. எனினும், அவன் கச்சலான உருவமுடையான், சிறிதும் வசீகரமில்லாத தோற்றமுடையான் என்பன அந்த நிலையில் அவனைப் பார்க்கும்போதே விளங்கின. முகத்தில் மீசையும் தாடியும் நன்றாக வளர்ந்து அடர்ந்திருந்தன. அவன் எதிரில், ஒரே ஆள் கையிலெடுத்துச் சென்று சிரமமில்லாமல் பயன்படுத்தக் கூடிய சிறிய ஒலிபெருக்கியொன்று இருந்தது. அவன் கையில் சிறிய கஞ்சிரா ஒன்று இருந்தது. நான் அங்குபோய் நின்றபோது, அவன் தன் பாட்டை நிறுத்திவிட்டுத் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தான். அவனையும், அந்தக் கூட்டத்தையும் பார்த்தபோது எனக்கு வியப்பாய் இருந்தது. 'இவனுடைய பாட்டைக் கேட்கவா இவ்வளவு பெரிய கூட்டம்' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

அவன் தலைசிறந்த இசைக் கலைஞன் அல்லன். அவன் பாடுகின்ற பாடல்களுக்குப் பின்னணியாக உயரிய பக்க இசைகளும் இல்லை. அவன் ஒரு சாமானியனிலும் சாமானியன். அவன் ஒரு தெருப்பாடகன். அவன் பாடலைக் கேட்டுக்கொண்டு அங்கே களிதுளும்ப அவனைச் சுற்றிலும் — தொலைவிலும், பெருஞ்சாலையை அடைத்துக்கொண்டு அதன் நடுவிலும் நிற்கின்ற மக்கள் கூட்டம், அதுவரை உயரிய, சிறந்த இசையினைக் கேட்டறியாதவர்களுமல்லர். எத்தனையோ பெரும் பெரும் கலைஞர்களின் சிறப்பிசைகளையெல்லாம் கேட்டுச் சுவைத்தவர்கள்தாம் அவர்கள். அந்தச் சூழல் ஒரு நாட்டுப்புறத்துச் சூழலுமல்ல. அது பெருநகர் ஒன்றின் புறவீதி. இவையெல்லாம் என் வியப்பைப் பெருக்கின.

இப்போது அந்தப்பாடகன் பாடத் தொடங்கினான். பாடினான். அவன் கையிலிருந்த கஞ்சிரா அவன் பாட்டுக்கேற்ப ஒத்திசைத்தது. அந்தப் பாட்டை நான் கேட்டபோதுதான் அங்கே கூட்டம் வந்து குழுமிநின்றிருப்பதன் மறைபொருளை உணரத் தலைப்பட்டேன். அங்கே மக்கள் ஏன் அவனைச் சூழ்ந்துகொண்டு நிற்கின்றார்கள் என்பதைக் கண்டுகொண்டேன்.

அவனுடைய குரலில் இனிமை இருந்தது. அவனுடைய பாட்டில் இசை நுணுக்கம் இல்லையெனினும், கேட்போரைப் பிணிக்கும் வெற்றிசை இருக்கத்தான் செய்தது. அவற்றிற்காகவா அங்கே மக்கள் குழுமி நின்றார்கள்? இல்லை, இல்லை!

அவன் பாடிய பாட்டு ஒவ்வொன்றும் அவன்தானே இயற்றியது. அந்த ஒவ்வொரு பாட்டையும்அவன் இயற்றியபோது வெற்றெனத் தொடுத்த சொற்கள் கொண்டு வெறும் வணக்கப்பாட்டாக, வெறும் புகழ்ச்சிப் பாட்டாக,வெறும் சிரிப்புப் பாட்டாக அவன் இயற்றத் துணியவில்லை. இயற்றவில்லை. அந்தப் பாடலுக்கென அவன் சேர்த்த ஒவ்வொரு சொல்லிலும் அவன் ஒரு கருத்தைச்சேர்த்திருந்தான். அந்தப் பாடலில் அவன் சேர்த்திருந்த ஒவ்வொரு வரியிலும் ஒரு நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லியிருந்தான். அந்தப் பாடலின் ஒவ்வொரு அடியிலும் அவன் ஒரு கதையைக் கூறியிருந்தான். அப்படி அவன் கூறியிருந்த ஒவ்வொரு கருத்தும் யாருக்கோ எப்போதோ தேவைப்படவேண்டிய சாதாரண கருத்து அல்ல. இன்றைய நிலையில் மன்பதையின் அடிமட்டத்தில், இடைநிலை மட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் இன்றியமையாது தேவைப்படுகின்ற கருத்து. இன்றைய நிலையில் நாட்டிலுள்ள பெரும்பான்மைச் சாமானியர் பட்டுக்கொண்டிருக்கும் துன்பவாதையிலொரு நிகழ்ச்சியினையே அவன் ஆக்கிய பாடலின் ஒரு வரியாக ஆண்டிருந்தான். இன்றைய மக்கள் நேர்மையினின்று விலகி நின்றுகொண்டு தடியாட்சி புரிகின்ற அரசின் வசப்பட்டு, அடைகின்ற வாதையை எடுத்துக் கூறுகின்ற கதையொன்றை அங்கே ஓர் அடியாகச் சேர்த்திருந்தான். எனவே,

தம்மைப்பற்றி, தாம் தாழ்ந்து கிடக்கும் இழிந்த நிலையைப்பற்றி அந்தப் பாடகன் பாட்டாகப் பாடுகிறான். அவைஅவ்வளவும் உண்மை

கின்றது என்பதை ரண்டு நிற்கும் மக்கள் உணர்கின்றனர். அப்படியே மெய் மறந்து நிற்கின்றனர். பின்னும் அந்தப் பாடல் அந்தத் துன்ப நிலைக்கெல்லாம் காரணம் நாட்டு மக்கள்பால் வாட்டத்தை ஏற்றி, அதன் வழி புகழும், பெருமையும், பெரும் பொருளும் பெற்றுக் களித்துக் கிடக்கின்ற தான்தோன்றிஆளுகையில் வீற்றிருப்போர்தாம் என்பதை எடுத்துச் சொல்கிறது. அந்தச் செய்தி கேட்டு முதலில் வியப்பும், பின்னர் துடிதுடிப்பும் அந்த மக்கள்பால் ஏற்படுகின்றன. எனவே அந்த மக்கள் மகுடியிற் கட்டுண்ட நாகமெனஅப்படியேஅசைதலின்றி, மூச்சுகூடப் பெரிதாக விடுதலின்றித் தம்மை மறந்து அவனைச் சூழவும் நின்றுவிடுகின்றனர்.

அந்தப் பாடகன் ஒரு மக்கட் பாடகன். அவன் வயிறு வளர்ப்புக்காகவே பாட்டிசைத்துக்கொண்டு திரிவோன் அல்லன். அவன் மக்கள் மத்தியிலே சிறப்பாகப் பாடி, மக்களின் ஆரவாரப் பாராட்டை மட்டும் பெற்றுக்கொண்டால் போதுமென்ற நோக்கத்தோடு பாட்டிசைக்கப்புகுந்தோனுமல்லன்.

அவன் பாடுதற்கென இயற்கையாகத் தனக்குக் கிட்டிய வாய்ப்பினை மக்கள் துயர்போக்கப் பாடுவதெனத் தன்னை மக்களிடம் ஒப்படைத்துக் கொண்டுவிட்ட மக்கட் பாடகன். புகழை அவன் தேடி ஓடவில்லை. செல்வாக்கை அவன் நாடித் திரியவும் இல்லை. பொருள் அவனுக்கு வயிற்றுபாட்டளவு கிட்டினாற் போதும். அதுவும் அன்றைப்பாடு அன்று; நாளைப்பாடு நாளை என்னும் போக்கினன்.

எப்படிப், புகழைத் தேடி அவன் ஓடவில்லையோ, அப்படியே துன்பங் கண்டு அவன் விதிர்ப்படையவுமில்லை. எப்படிச், செல்வாக்கை நாடித் திரியவில்லையோ, அப்படியே மாற்றாரின் ஏசலையும், இழிமொழியையும் அவன் கண்டு கலங்கியது கிடையாது. அதிகார மிடுக்கை அவன் துச்சமாக மதிப்பான். ஆணவப் போக்கை அவன் எவ்வாற்றானும் எதிர்த்துப் பொருதத் துணிந்து முன்வந்து நிற்பான்.

அவன் யாருடைய பாராட்டுக்காகவும் காத்து நிற்பதில்லை. அவன் யாருடைய தூற்றல் கண்டும் முகம் சுழிப்பது கிடையாது. அதிகார போதை மிஞ்சியோரின், ஆணவப் போக்கு நிறைந்தோரின் கொடிய பார்வையைக்காணும்போது,அவன் அதை அற்பத்திலும் அற்பமாகவே எண்ணினான். அதே வேளை ஏழையரின் துன்பங் காணும்போது அவன் துடிதுடித்து நின்றான். தேம்புகின்ற மக்களின் ஏக்கப் பார்வை அவனை உள்ளமுருகி அழச்செய்தது. மேட்டிமையாளரின் அடாவடிப் பேச்சு அவன் உள்ளத்தை எரிமலையாக்கியது.

எனவே, வெவ்வேறு துருவத்திலிருக்கும் இந்த இரண்டு நிலைகளையும் எடுத்துவைத்து ஒப்புநோக்கித் தெளிவுற ஆய்ந்து அவன் பாடல் இயற்றினான்.அந்தப் பாடலை மக்கள் மன்றில் வைத்தான். அது அவன் வேலை, தொண்டு. பிழைப்பு அல்ல. பொழுது போக்கு அல்ல.

எனவே, அவன் மக்கட்பாடகன். எனவே அவன் பாடலில் மக்கள் மெய்மறந்தனர். அவனைச் சூழ்ந்து வந்து மொய்த்து நின்றனர்.

O

முன்னும், பின்னும் காவலர் ஊர்திகள் காவல்காத்துவர நடுவே ஒய்யாரமாக, உல்லாசமாக உலா வந்தார் நாட்டின் முதலமைச்சர். அவர் உலாச் சென்றுகொண்டிருந்த நெடுஞ்சாலையின் மருங்கில் தான் அந்த மக்கட் பாடகன் பாட்டிசைத்துக்கொண்டிருந்தான். அவன் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்த கூட்டம், அதிலே இலயித்துப்போய் நின்ற கூட்டம் நெடுஞ்சாலையையும் அடைத்துக்கொண்டுதானே நின்றிருந்தது! எனவே, விரைந்து போய்க்கொண்டிருந்த அமைச்சரின் உலா ஊர்திகள் மக்கள் கூட்டம் சாலையில் குறுக்கே நின்றிருந்ததால் நிறுத்தப்பட்டுவிட்டன. இனி அந்தக் கூட்டத்தை விலக்கிவிட்டு, ஒதுக்கிவிட்டுத்தான் அமைச்சர் மேலே தன் உலாவைத் தொடர வேண்டும்.

ஊர்திகள் நிறுத்தப்பட்டதும் காவல் தலைவன் ஒருவன் கீழே இறங்கினான்.அவனைத் தொடர்ந்து காவல் ஊழியர் சிலரும்இறங்கினர்.அமைச்சர் காவல் தலைவனை அழைத்தார்.

“என்ன கூட்டம் இது? ஏன் ஊர்தியை நிறுத்திவிட்டீர்கள்?”

அந்தக் காவல் தலைவன், “நானும் உங்கள் கூடத்தானே வருகிறேன்” என்று சொல்ல நினைத்தான்.ஆனால் சொல்லவில்லை. ‘கண் முன்னால் மக்கள்கூட்டம் தெரிகிறது.அதைத் தாண்டிச் செல்லவேண்டுமானால் ஊர்தியை நிறுத்தி, மக்களை ஒதுக்கி வழியமைத்துக் கொண்டுதான் செல்லவேண்டும் என்பதை, யாராலும், கண்ணால் அந்தச் சூழ்நிலையைப் பார்த்த கணத்தில் உணர்ந்து கொண்டுவிடமுடியும். இருந்தும், “ஏன் நிறுத்தினாய்” என்று கேட்கிறாரே! என்னே இவர் அறிவு!’ என்று அவன் உள்ளத்துள் எண்ணிக்கொண்டபோது, வெளியே அவனை மீறிக்கொண்டு ஏளனச் சிரிப்பு முட்டி வந்தது. எனினும் அவன் வெளிப்படையாகச் சிரித்துவிடவில்லை.அதை அடக்கிக்கொண்டான். “என்ன கூட்டம் என்று பார்த்துவிட்டு வருகிறேன் பிரபு!” என்று கூறிக்கொண்டு காவல் தலைவன் கூட்டத்துக்குள் நுழைந்தான்.

அதே வேளை அந்த மக்கட் பாடகனின் பாட்டொலி அந்த அமைச்சர் காதுகளில் வந்து தாக்கியது. அவர் எத்தனையோ பாடல்களைக் கேட்டிருக்கிறார். ஊக்கமூட்டும் பாடல்கள். புரட்சிப் பாடல்கள், ஆட்சியிலிருப்போர் புரிகின்ற தவறுகளை எடுத்துவிளக்கும் பாடல்கள் ஆகியவற்றை. அவையெல்லாம் இந்த மக்கட் பாடகனின் பாட்டைப் போல் நிலைமையைத் தெள்ளத் தெளியக் கண் முன்னால் நிறுத்திக் காட்டவில்லை. அவரே தன்னை மறந்து சில நிமிடங்கள் அந்தப் பாட்டிலே ஆழ்ந்து கிடந்துவிட்டார். பிறகுதான் திடுக்குற்றாற்போல் நிமிர்ந்து உட்கார்ந்தார். இந்தப் பாட்டு என் ஆட்சியின் தவறுகளை எடுத்துச் சொல்வனவாகவல்லவா இருக்கின்றன.ஆகா, இந்த அற்பன் என்னுடைய ஆட்சியை அல்லவா எதிர்த்துப் பாட்டுக்கள் பாடுகிறான்! என்ன திமிர் இந்த அற்பனுக்கு! நான் எப்படிப்பட்டவன் என்பதை இந்த அற்பப் பயல் தெரிந்து கொண்டுதானே இருக்கவேண்டும்! இருந்தும் இவன் என்னை எதிர்த்துப் பாடுகின்றானே! என்னுடைய அதிகாரம் எவ்வளவு பெரியது! என் கட்டளைக்காக என் காலடியிற் காத்து எவ்வளவு பெரிய அதிகாரிகள் எல்லாம் வீழ்ந்து கிடக்கிறார்கள்! நான் சுண்டு விரலை நீட்டினாற் போதும்! அந்தப் பேரதிகாரம் படைத்த அதிகாரிகள் எல்லாம் எதையும் செய்வதற்குச் சித்தமாக இருக்கிறார்கள்! நான் நினைத்தால் இந்த நிமிடமே இந்த நாட்டை வெறும் சுடுகாட்டுப் பொட்டலாக்கி விடமுடியும்! என்னை எதிர்த்து, என் ஆட்சியை எதிர்த்து இந்தப் பிச்சைக்காரப்பயல் பாடுகின்றானே! இந்தப் பிச்சைக்காரப் பயலின் பாடல்களைக் கேட்க இங்கே இவ்

வளவு மக்கள் கூடி நிற்கிறார்களே! என்ன அநியாயம்!" நெடுமூச்செறிகிறார் அமைச்சர்!

சிறிது நேரத்தில் காவல் தலைவன் திரும்பி வருகிறான்.

"பிரபு, இங்கே பாடுபவன் ஒரு சாமானியப் பாடகன். அவன் பெயரே பாடல்வல்லான் தானாம்! அவன் வாழ்வே இந்தப் பாடல் மூலமாகத்தான் நடைபெறுகின்றதாம். என்றாலும், அவன் மிகு தொகை யாரிடமும் பெறுவது கிடையாது. சாமானிய மக்கள் தரும் ஒரு காசு, இரண்டு காசுகளைத்தான் அவன் விரும்பி ஏற்றுக்கொள்கின்றானாம். மிகு தொகையாக யாரேனும் தந்தால் அதைப் பொது நிதி ஏதேனும் ஒன்றுக்குத் தந்துவிடுகின்றானாம். தனிப்பட்டோரின் சிறப்பு அழைப்புக்களைவிட மக்களின் பொது அழைப்புக்களைத்தான் அவன் விரும்பி ஏற்றுக் கொள்கின்றானாம்! பாட்டைத்தான் நீங்கள்கூடக் கேட்டிருப்பீர்களே!"

"அவனை இங்கே அழைத்துவர முடியுமா?"

"அவன் பாடிக் கொண்டிருக்கின்றானே!"

"போய்க் கூட்டிவாரும் என்றால்.. ...!" அமைச்சர் அதிகாரக் குரல் எடுத்து அதட்டினார். காவல் தலைவன் பேசாமல் திரும்பி நடந்தான் கூட்டத்தை நோக்கி.

சுவரில் எறிந்த பந்துபோல் திரும்பி வந்தான் காவல் தலைவன் சிறிது நேரத்தில். அங்கே பாடகனின் பாட்டு மேடையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தது.

"ஏன், ஏன்? எங்கே அவன்? ஏன் வரவில்லை? என்ன சொன்னான்?"

அடுக்கிக்கொண்டு போனார் அவசரத்தோடு, ஆத்திரத்தோடு அமைச்சர் கேள்விகளை.

"சற்றுப் பொறுத்திருங்கள்! பாட்டுக்களை யெல்லாம் பாடிமுடித்து விட்டு வருகிறேன் என்றான் அந்தப் பாடல்வல்லான்"

"நீர் காவல் தலைவர் என்பதை உம்மைப் பார்த்தே அவன் அறிந்திருப்பானே! உம்மைஏவிவிட்ட நான் இந்த நாட்டின் முதலமைச்சர் என்று சொன்னீரா?"

"நான் சொல்லவில்லை. அவன் முன்கூட்டியே தெரிந்து வைத்திருக்கிறான். 'முதலமைச்சரா வந்திருக்கிறார்? சற்றுப் பொறுத்திருக்கச் சொல்லுங்கள்' என்கிறான் அவன்"

"இங்கே வழியில் நான் காத்திருக்கிறேன் என்று சொன்னீரா?"

"சொன்னேன்! அதற்கு,—இங்கே ஆயிரக் கணக்கான பாட்டாளியர் என் பாட்டைக் கேட்க ஆவலோடு காத்து நிற்கின்றனர். இந்த ஆயிரம்பேரின் விருப்புக்கு முன்னால் அந்த ஒருவரின் தனிவிருப்பு அத்துணைப் பெரிதல்லவே என்கிறான் அவன். என்னைப் பார்க்கத்தான் வேண்டும்என்றஅவசியம் இருந்தால் சற்றுப் பொறுத்திருக்கச் சொல்லுங்களேன் என்று திரும்பவும் சொன்னான் அவன்."

"எப்படி ஐயா, அவன் திரும்பவும் அப்படிச் சொன்னான் என்று சொல்லிக்கொண்டு என் எதிரிலே வந்து நிற்கிறீர்?"

"வேறு என்ன செய்வது?"

"என்னய்யா அறிவில்லாமற் கேட்கிறீர் என்ன செய்வதென்று! 'காத்திரு' என்று அவன் சொன்ன வாய் மூடுவதற்கு முன்னால் அவனை இங்கே இழுத்துவந்திருக்கக் கூடாதா?"

"அப்படிச் செய்வது......"

"என்ன அப்படிச் செய்வது! போம்! உடனே போம்! அவனைக் கைதுசெய்து கொண்டுவாரும்! அவனிடம் நான் பேசவேண்டும். பேசியாகவேண்டும்! அவனை நான் மிரட்டவேண்டும்! மிரட்டியாக வேண்டும்!"

"திடீரென்று போய் ஒருவனைக் கைது செய்வது மனித உரிமைக்கே எதிரானதாயிற்றே! கொள்ளைக்கூட்டத்தார்கூட ஒருவனைக் கடத்திச் செல்ல வரும்போது சமயம்பார்த்து, பொறுத்திருந்துதானே அந்தச் செயலைச் செய்து முடிக்கின்றனர். நீங்கள் எங்களுக்குத் தலைவர்தான். நீங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றித்தான் தீரவேண்டும். என்றாலும், காவல் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் எங்கள் பொறுப்பு மிகப் பெரியதாயிற்றே! முதலில் வேண்டியோர், வேண்டாதார், வேண்டுதல், வேண்டாமை என்ற வேறுபாடுகளுக்கு நாங்கள் எந்த வகையிலும் எங்களை ஈடுபடுத்திக் காட்டிக் கொண்டு விடக்கூடாது. ஒழுங்கை நிலைநாட்டவேண்டியது எங்கள் பொறுப்பு. அமைதியைக் காத்து நிற்கவேண்டியது எங்கள் கடமை. எங்களைக் காவல் ஊழியர் என்று கூறுவதன் பொருளே வலிமை இருக்கின்றது என்பதற்காக அடாவடிச் செயல்களில் ஈடுபடும் வலியாரிடமிருந்து வலியிழந்தார், எய்த்தார் எளியார் எனப்படுவோரைக்காத்து நிற்போர்;—அன்னார்க்கு ஊறுநேராமற் பார்த்துக்கொள்வே தானே! நாங்களே காவலர் உற்றப் உடுத்திய கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்களாக மாறினால், ஏழையரைக் காப்போர்தான் யார்? நியாயத்துக்கு, நேர்மைக்குப் பக்கபலமாக நிற்போர்தான் யார்?"

"ஏனய்யா, நீர் என்ன அந்தப் பாடல் வல்லானுக்கு வேண்டியவரோ? நீர் நியாயமும், நீதியும், ஒழுங்கும் பேசுவது 'யார் எதிரில் என்பதை மறந்துவிட்டீரா? உம்முடைய அலுவல் சீட்டு என்கையிலிருக்கிறது என்பதை மறந்துவிட்டீரா?"

அந்தக் காவல் ஊழியருக்குக் 'குப்' என்று வியர்த்துவிட்டது. அவர் சிறிதுநேரம் பேசாமல் நின்றுவிட்டார். பாவம் அவர்! அவர் பேசாமல் நின்றிருந்தவேளை தன்னைப்பற்றியும், தன் அலுவலைப்பற்றியும் தான் அவர் எண்ணியிருக்கவேண்டும் 'நான் குழந்தைகுட்டிக்காரன், கூடுதலான சொத்துக்கள் ஏதும் இல்லாதவன். அலுவலைக்கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றவேண்டிய நிலையிலுள்ளவன். இந்த நிலையில் இவரை எப்படி நான் தன்னந்தனியனாக எதிர்க்கமுடியும்? இவர் கூறுகின்ற அநியாயச் செயலில் ஈடுபடாமல் எப்படி நான் தப்புவது? ஐயோ, இவன் கட்டளையை நான் நிறைவேற்றி வைக்காவிட்டால் நான் கடமையிலிருந்து தவறினேன் என்றல்லவா இந்த அநியாயக்காரன் என்மீது பழிசுமத்துவார். மனச்சான்று இல்லாதவர்களும், உண்மை உணர்வு இல்லாதவர்களும், இரக்கமற்ற மனத்தவர்களும், பிறர் துயர்கண்டு அகமகிழ்வோரும், மற்றவர்களின் நலத்தைவிட, மக்களின் வாட்டத்தைப் போக்குவதைவிடத் தன்னுடைய வார்த்தைக்கு மதிப்பு இருக்கவேண்டும் என்பதற்காக எந்த அடாவடிச் செயலிலும் ஈடுபடுவதற்கு அஞ்சாதவர்களும் ஆட்சிப் பலகையில் ஏறினால், எத்தனை எத்தனைபேர் தங்கள் மனச்சான்றுக்கு முரணாகச் செயல்படும்படி நேர்ந்துவிடுகிறது! இருக்கட்டும். இப்போதைக்கு எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வோம். இவர் கட்டளைப்படி நடந்து முடிப்போம். பிறகு, ஒருநாள் ஒரு வாய்ப்பு வராமலா போகப்போகிறது! அப்போது பார்த்துக்கொள்வோம் இவரை!' என்றுதான் அந்தக் காவல் ஊழியர் தமக்குள் எண்ணிக் கொண்டிருக்கவேண்டும்.

[redacted]காவல் ஊழியரின் தயக்கத்தைப் பார்த்ததும் அமைச்சருக்கு என்ன தோன்றியதோ! அவர் சொன்னார்: "முதலில் கூட்டத்தை விலக்கி நான்போவதற்கு வழி செய்துவிடும்! பிறகு கூட்டம் கலைந்து எல்லாரும் திரும்பிக் கிளம்பும்போது அந்த பாடல் வல்லானைக் கைது செய்துகொண்டு வாரும்!— போக்குவரத்துக்கு அவன் இடைஞ்சல் செய்தான் என்று குற்றஞ் சாட்டிவிடும்!"

காவல் தலைவர் சாலையில் நின்ற கூட்டத்தை ஒதுக்கி வழி செய்தார். அமைச்சரின் ஊர்தி விரைந்தது.

காவல் ஊழியர் இருவர் பாடல் வல்லானை அழைத்துச் சென்றனர். அவர்கள் பெரியதொரு கட்டிடத்தின் எதிரிற் போய் நின்றனர். பாடல் வல்லான் அந்தப் பெரிய கட்டிடத்தை ஏறிட்டுப் பார்த்தான். "ஆமாம், இது காவல் நிலையம் அல்லவே! இங்கு ஏன் என்னை அழைத்துக்கொண்டு வருகிறீர்?" என்று காவலரிடம் வினவினான்.

"இது காவல் நிலையம் அல்லதான். ஆனால் காவல் நிலையங்களின் தலைவர்கள் எல்லாருக்கும் பெரிய தலைவர் இருக்குமிடம். இங்குதான் உம்மை அழைத்து வரும்படி எங்களுக்குக் கட்டளை" என்று கூறிக்கொண்டு பாடல் வல்லானை உள்ளே அழைத்துச் சென்றனர் காவல் ஊழியர்.

அந்தப் பெரிய கட்டிடத்தின் இரண்டு மாடிகளைக் கடந்து, பல சிறிய பெரிய அறைகளைக் கடந்து சென்றார்கள் அவர்கள். கடைசியாக ஒரு பெரிய அறை. அந்த அறை அந்தக் கட்டிடத்தின் பின் பக்கத்தில் இருந்தது. அதன் நான்குபுறச் சுவர்களும் பலமான உருக்குத் தகடுகளால் ஆனவை. அதன் வெளிக் கதவும் பெரியதொரு இரும்புக் கதவு. அதன் வாயிலில் இரண்டு காவல் ஊழியர்கள் துப்பாக்கியும் கையுமாக நின்று காவல் காத்துக்கொண்டிருந்தனர்.

பின்னும் சில காவல் ஊழியர்கள் அந்த அறையைச் சுற்றிச் சுற்றி நடைபோடும் பாவனையில் காவல் புரிந்துகொண்டிருந்தனர்.

பாடல் வல்லான் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டான். உள்ளே அந்த அறையின் அமைப்பே விசித்திரமாக இருந்தது. அந்த அறையின் நடுவே பெரியதொரு விருந்து மேசையைப்போல வட்ட மேசையொன்று போடப்பட்டிருந்தது. அதன் பக்கவாட்டில் பிறிதொரு மேசை கிடந்தது. அந்த மேசை எதிரே ஒரு ஆள் உட்கார்ந்திருந்தான். அவன்தான் காவல் தலைவர்களுக்கெல்லாம் தலைவன் போலும்! அவனைத் தவிர வேறு யாரும் அந்த அறைக்குள் கிடையாது. அவன் எதிரே பாடல் வல்லானைக் கொண்டு போய் நிறுத்தியதும் காவல் ஊழியர் இருவரும் கையை உயர்த்தி வணக்கம் தெரிவித்தனர் அந்தத் தலைவனுக்கு.

அந்தத் தலைவன் பதில் வணக்கம் கூடச் செய்யவில்லை. "இனி நீங்கள் போகலாம்!" என்று உறுமினான் அவர்களைப் பார்த்து. அவர்கள் திரும்பினர்.

அந்தத் தலைவனின் உறுமல் ஒலி பாடல் வல்லானைத் திகைக்க வைத்தது. அவனை நன்றாக உற்று நோக்கினான். அவன் பார்வையை ஒரு முறை பார்த்த மாத்திரத்திலேயே அதில் கொடுமை வெறி பீறிட்டுக் கிடப்பதை அவன் உணர்ந்தான். பின்னும் அதில் சின வெறியும், மது வெறியும் பின்னிப் பிணைந்து கனல் கக்கிக்கொண்டிருந்தன. உட்கார்ந்த நிலையிற்கூட அவன் தோற்றம் அஞ்சத்தக்க தோற்றந்தான். தன்னைவிட வலி குறைந்தாரையும், நிலை தாழ்ந்தாரையும், தன்னால் அடக்கி ஒடுக்கக் கூடிய நிலையில் உள்ளாரையும் அவன் பார்க்கும்போது இயல்பாகவே பகைமை உணர்வோடு தான் அவன் பார்ப்பான் என்பதை அவன் முகக்குறி எடுத்துக் காட்டிற்று.

அந்தத் தலைவனை எடைபோட்ட பிறகு பாடல் வல்லானை அந்த அறையில் உள்ள பொருள்களைப் பார்த்தான். முதலில் அந்தத் தலைவன் அமர்ந்திருந்த மேசைமீது ஒருபுறமிருந்த நாலைந்து பிரப்புகளும், பிறிதொருபுறமிருந்த குதிரைச் சாட்டைகளும், வேறு ஏதேதோ சிறு சிறு கருவிகளும் அவன் கவனத்தைக் கவர்ந்தன. அந்த அறையின் ஒரு புறத்தில் பத்துப் பதினைந்து துப்பாக்கிகள் மரச்சட்டமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவைதான் அங்கே குறிப்பிடத்தக்கன. அந்தப் பொருள்களைத் தவிர, மற்றும் அங்கே ஒரு புதுமையை அவன் கண்டான்.

வெளியிலிருந்து பார்க்கும்போது உருக்குத் தகடுகளால் மூடப்பட்டிருப்பதுபோல் தென்படும் அந்த அறை, உள்ளே என்ன நிகழ்கிறது என்று கண்டுகொள்ளமுடியாதநிலையிலுள்ள அந்த அறை, உள்ளே எவ்வளவு பெரிய ஒலி கிளப்பினாலும் வெளியே அந்த ஒலிவந்து கேட்காதபடி அமைந்துள்ள அந்தஅறை, உள்ளே இருந்துகொண்டு பார்க்கும்போது வெளியில் நிகழ்கின்ற எல்லாவற்றையும் பார்க்கக்கூடிய நிலையில் அமைந்திருந்தது. வெளியில் எழுகின்ற ஒருசிறிய ஊசிவிழும் ஒலியைக் கூடக் கேட்க முடிந்தது. அந்த மூன்றாவது மாடியைப் பொறுத்தமட்டுமே அந்தநிலை என்பதில்லை. அந்த அறையிலிருந்தவண்ணம் அந்தப் பெரிய கட்டிடத்தின் சுற்றுப்புறத்தையெல்லாம் கண்காணிக்க முடிந்தது. அந்தப் பெரிய கட்டிடத்தின் உட்புற, சுற்றுப்புற நிகழ்ச்சிகள் அவ்வளவும் கணந்தோறும், கணந்தோறும் அந்த அறையில் அற்றுபடியாகிக் கொண்டுவந்தன.

"டேய்! நீ யார்?"

திடீரென்று அந்தத் தலைவன் எனப்பட்டு அமர்ந்திருந்தவன் வெறிக்கூச்சல் போடுபவனாகிக் கத்தினான்.

தன் கவனத்தை வேறொன்றில் செலுத்திக்கொண்டிருந்த பாடல் வல்லான் திடுக்குற்று அந்தத் தலைவனை நிமிர்ந்து பார்த்தான். அவனுக்கே ஐயம் அந்தத் தலைவன்தான் அப்படி வெறித்தனமாக மரியாதையற்ற வார்த்தையால் உரையாட முனைகின்றானா என்று. காவல் ஊழியன் ஒருவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு மக்களாட்சிப் பண்போடும், நீதியும், நேர்மையும், வாய்மையும் தவறாத வகையிலும் அறிவறிந்த பெரியோர் வகுத்துவைத்துள்ள விதிமுறைகளைச் செயல்படுத்தவேண்டியவன் இந்தக் காவல் தலைவர்களுக்கெல்லாம் தலைவன். மிகக் கொடிய குற்றங்கள் புரிந்தவன் ஒருவனிடத்திலும் அன்போடு பேசவேண்டிய நிலையினன், பண்போடு பழகவேண்டிய முறைக்கே பாதுகாவலன். இனிய மொழிகூறி வழிகாட்டி நிற்க வேண்டியவன். சாமானியக் காவல் ஊழியன் ஒருவன், காவல் ஊழியத்தின் விதிமுறைகள் அவ்வளவையும் நன்றாகத் தெரிந்துகொள்ளாதவன் ஒருவன் பேசத் துணியாத, பேசக்கூடாத வார்த்தைகளை இந்தக் காவல் துறையின் பெரிய தலைவன் பேசுகின்றானே, இவனிடம் நாம் மரியாதையையோ, பண்பையோ நியாயத்தையோ எப்படி எதிர்பார்ப்

பது என்று பாடல் வல்லான் எண்ணியபோது, அவனையறியாமலே அவன் உள்ளம் துணுக்குற்றது.

"டேய்! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் என்ன அப்படியும், இப்படியும் விழித்துக்கொண்டு நிற்கிருய்? சொல்! நீ யார்?" என்று திரும்பவும் அந்தத் தலைவன் கூச்சலிட்டான்.

இப்போது அவன் எழுந்து நின்ருன். அந்த மேசையின் ஒரு ஓரத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த பிரம்புகளில் ஒன்றை அவன் கையில் எடுத்துக்கொண்டான். பாடல் வல்லானின் அருகில் வந்து நின்ருன். "சொல்! நீ யார்?" என்று திரும்பவும் சத்தமிட்டான். அவன் பேசிய போது அவன் வாயிலிருந்து எச்சில் தெறித்து விழுந்தது. அவனிடமிருந்து அழுகிய பழங்களின் வாடை 'குப்' என்று வீசியது. அந்த வாடையைச் சகித்துக்கொள்ள முடியாமல் பாடல் வல்லான் சற்றுப் பின்னல் நகர்ந்து நின்ருன்.

"சொல் சீக்கிரம்! நீ யார்?"

திரும்பவும் அந்தத் தலைவன் கூச்சலிட்டான். திரும்பவும்அவன் வாயினின்று எச்சில் தெறித்து விழுந்தது. திரும்பவும் அந்த நெடி அவனிடமிருந்து கிளம்பிப் பாடல் வல்லானை மூச்சு முட்டச் செய்தது. திரும்பவும் ஓரடி பின்னல் நகர்ந்து கொண்டான் அவன்.

"நான் ஒரு பாடகன்!"

"பாடகன்! நீயெல்லாம் பாடகன்! ஊரைக் கெடுக்கவந்தவன் எல்லாம் பாடகன்! அ அ! அ!! அ!!! கெக்கொலியிட்டு ஓங்கிச் சிரித்தான் அந்த வெறியன்.

"உன் பேர்?"

"என் பெயர் பாடல்வல்லான்!"

"பாடல்வல்லான்! யார் அந்தப் பெயரை உனக்கு வைத்தது?"

"யாரும் வைக்கவில்லை. நானே வைத்துக்கொண்டேன்!"

"ஏன் வைத்துக்கொண்டாய்?"

"என்விருப்பம்! வைத்துக்கொண்டேன்!"

"உன் இளமைக்காலத்துப் பெயர் என்ன? ஏன் அதை மாற்றிவிட்டாய்?"

"வராகம் என் இளமைக்காலத்துப் பெயர்! வராகம் என்பதற்குப் பன்றி என்று பொருள். பன்றியென்று நான் பெயர் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அதனல் அதை மாற்றிவிட்டேன்!"

"ஏன் மாற்றினுய்? எப்படி மாற்றலாம்? சட்டப்படி உன் மேல் நடவடிக்கை எடுக்கப்போகிறேன்!"

"பேரை மாற்றுவது குற்றம் என்று எந்தச் சட்டம் கூறுகின்றது?"

"டேய், சட்டத்தைப்பற்றி என்னிடம் எப்படி நீ கேள்வி கேட்கலாம்! நான் யார் தெரியுமா? நான்தான் சட்டத்தை உண்டாக்குகின்றவர்களுக்குப் பக்கத்தில் நிற்பவன். நான்தான் சட்டத்தைப் பாதுகாப்பவன். சட்டம் இப்போது என்கையில் தான் இருக்கிறது. அதை நான் எப்படிவேண்டுமானுலும் பயன்படுத்திக்கொள்ள முடியும்! தெரியுமா? அந்தச் சட்டத்தை என் விருப்பம் எப்படியோ அப்படியெல்லாம் நான் மாற்றுவேன்! நான் யார் தெரியுமா? நான்...நான்... சும்மா காவல் அதிகாரிஎன்று நினைத்துக்கொள்ளாதே! நான்தான் இராசா! சட்டத்தைப் போடுகின்றவனையெல்லாம் மட்டந்தட்டுகின்றவன் நான்! என்னை யாரென்று எண்ணினுய்! நான் இராசா! இராசா சொன்னதுதான் சட்டம்! இராசா போட்டதுதான் சட்டம்! இராசா பேசறது எல்லாமே சட்டந்தான்! என்னிடம் சட்டத்தைப்பற்றி எதிர்வார்த்தைபேசாதே! நீ புனைபெயரோ, புதுப்பெயரோ வைத்துக்கொண்டிருப்பது சட்டப்படி குற்றம் என்ருல், அப்படியே ஒப்புக்கொண்டு விடு! எதிர்வாதம் பண்ணதே! எதிர்வாதம் பண்ணினுல் என்ன செய்வேன் தெரியுமா? இதோ பார், இந்த மேசையைப் பார்! இங்கே குவித்துவைக்கப்பட்டிருக்கும் அவ்வளவு பிரம்புகளும் முறிந்துபோகும் வரையில் உன்னை அடித்துத் தீர்ப்பேன்! அவ்வளவு சாட்டைகளும் அறுந்துபோகும் வரையிலும் உன்னை அடித்துத் தீர்ப்பேன்! நீ செத்தால்கூட விடமாட்டேன். இந்தப் பிரம்புகள் ஒன்றுகூட எஞ்சாமல் முறியவேண்டும்! இந்தச் சாட்டைகள் அறுந்து போகவேண்டும். அப்போதுதான் உன்னைவிடுவேன். ஆமாம் தெரிந்து கொள்! சட்டத்தைப்பற்றி—அதை உண்டாக்கிய என்னிடம் எதிர்வாதம் புரிய வந்துவிடாதே!" என்று தடுக்கித் தடுக்கி மயக்க மொழியில் உளறிக் கொட்டினுன் அந்தக் காவல் தலைவன்.

பாடல்வல்லான் மறுமொழி பகராமல் அப்படியே நின்ருன். அந்தக் காவல் தலைவனின் நிலை, அவன் உளறல் மொழி, நீச்சு நிலை தெரியாத அவனுடைய தடுமாற்றப் போக்கு எல்லாம் அவனைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கின. 'சட்டத்தைக் காக்கவேண்டிய மிகமிகப் பொறுப்பு வாய்ந்த உயர் அலுவலில் இருக்கும் ஒருவன் குடியாட்சி நடப்பதாக விளம்பப்படும் ஒரு நாட்டில் இப்படிப் பொருத்தமற்ற வார்த்தைகளைச் சராசரிக் குடிமகன் ஒருவனே பண்பற்றவை, தரமற்றவை என்று ஒதுக்கித் தள்ளவேண்டிய வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு, ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்கிருன் என்ருல், நியாயமும், நேர்மையும், உண்மையும், ஒழுக்கமும் எவ்வளவு பெரிய இடர்ப்பாட்டில் சிக்கிக்கொண்டிருக்கின்றன என்று எண்ணியபோது அவன் தலை சுற்றத் தொடங்கிவிட்டது. அவன் அப்படியே நின்ருன். வாய் திறக்கவில்லை.

"ஏய்! என் வார்த்தையை மதிக்கவில்லையா? என்ன பேசாமல் நிற்கிருய்?" என்று உறுமிக்கொண்டு, பாடல்வல்லான் சற்றும் எதிர்பாராத நிலையில் படீர் என்று கையிலிருந்த பிரம்பால் ஓங்கி ஒரு அடி அடித்தான். அந்த மூர்க்கன்.

அதிர்ச்சியால் தலை சுற்றிக் கொண்டிருந்த பாடல்வல்லானை அந்தப் பிரம்படி, அதனல் ஏற்பட்ட பெரு வேதனை அதிர்ச்சியினின்று நீக்கிவிட்டு ஒரு நிலைக்கு வரச்செய்தது.

'ஏற்கனவே போராட்டத்தில் குதித்துவிட்டவன் நான். அநீதியை எதிர்த்து நிற்கும் போராட்டத்தில், அக்கிரமத்தைச் சாடுகின்ற போராட்டத்தில்! இப்போது களத்தில் நிற்கிறேன் நான். மாற்ருனின் விலங்காற்றலையும், இயந்திர வலியையும்—இனி எவ்வளவு கொடிய தன்மையோடு, பேராற்றலோடு அவை என்னைத் தாக்கினுலும் உள்ளங் கலங்காத நிலையில் அவற்றையெல்லாம் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். நான் ஈடுபட்டிருக்கும் போராட்டத்தின் உச்சக் கட்டமே இப்படி எதையும் பொறுமையோடு தாங்கிக்கொள்வதன் மூலம்தான் சிறப்புப்பெற விருக்கிறது.' என்ற உறுதியானதொரு நிலையைஉள்ளத்தில் ஏற்றிக்கொண்டு நின்ருன் அவன்

பாடல்வல்லானின் பேசாமை எதிரிலிருந்த மூர்க்கனை மேலும்,மேலும் சினத்துக்குள்ளாக்கிற்று போலும்!

"டேய்! என் வார்த்தையை மதிக்கவில்லையா நீ! பேசு! நீ என்ன தொழில் செய்கிறாய்?"

"நான் தொழில் செய்யவில்லை! தொண்டு செய்பவன் நான்!"

"தொண்டு! பெரிய தொண்டு! அ! அ! அ! அ! அ!" என்று உரக்கச் சிரித்துவிட்டு "அந்தத் தொண்டுதான் என்ன?" என்றான் அந்த மூர்க்கன்.

"பாடல்மூலம் என் தொண்டினைச் செய்கிறேன்!" என்றான் பாடல்வல்லான்.

"பிச்சைக்காரப் பயல்! பாடுகின்றானும் பாட்டு! அது தொண்டாகி விட்டதாம் இவனுக்கு! பாடுவதன் மூலம் நீ வயிறு வளர்க்கிறாய்! பாடிப் பாடி நீ பணம் சேர்க்கிறாய்! ஏமாற்றுதே! அந்தப் பாட்டு இல்லை என்றால் உனக்குப் பிழைப்பு இல்லை!"

"பாட்டின் அருமை தெரியாது உமக்கு! அதைச் சொன்னாலும் புரியாது! பிழைப்புக்காகப் பாட்டுப் பாடுவோனாக இருந்தால் நான் வீதி வீதியாகச் சுற்ற வேண்டிய தேவையே கிடையாது. ஓரிடத்திலிருந்து கொண்டு பாடி, மாதத்துக்கோ, கிழமைக்கோ ஒருநாள் மட்டும் பாடி என் தேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் — வெகு வெகு எளிதிலே என்னால்!"

"பிச்சை வாங்குவதில் பெருமை வேறு! அற்பப் பயலே! பாட்டு இவனுக்குத் தெரியுமாம்! சொல்கிறான்! பாட்டு யாருக்கடாவேண்டும்! உன்னைப்போலப் பிழைக்கத் தெரியாதவன்கள் அதைப் பாடிக்கொண்டு அலையவேண்டும்! ஊரில் உள்ள காலிகளும், சோம்பேறிகளும் அதைக் கேட்டுக்கொண்டு சவடால் அடிக்கவேண்டும்! வேறு எதற்கு அந்தப் பாட்டுப் பயன்படும்? யோக்கியமானவன் எவனாவது பாட்டுப் பாட முன்வருவானா? அறிவுள்ளவன் எவனாவது பாட்டைக் கேட்டுக் கொண்டு வீண்பொழுது போக்குவானா?"

"நீர் வேண்டுமானால் நீர் சொல்லுகின்ற முறையிலான பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டு நின்றிருக்கலாம்!' என்று பட்டென்று பதில் சொன்னான் பாடல்வல்லான். அதன் பொருள் அந்த மூர்க்கனுக்குப் புரியவில்லை.

"சரி, நீ யாரைக் கேட்டுக் கொண்டு தெருத்தெருவாய்ப் பாடிக் கொண்டு திரிகிறாய்?"

"பாடுவதற்கு யாரிடமாவது அனுமதிபெற வேண்டுமா என்ன?"

"ஆமாம், அனுமதி பெற்றுத்தான் ஆகவேண்டும்! நான் ஒருவன் இங்கே அதிகாரத்திலிருப்பது தெரியாதோ? பாடுவோன் எல்லாம் என்னிடம் கேட்டுக்கொண்டுதான் பாட வேண்டும்! பேசுவோன் எல்லாம் என் உத்தரவு பெற்றுக்கொண்டுதான் பேசவேண்டும்!

"அப்படியென்றால்!......?"

"அப்படியென்றால்! அப்படித்தான் இனி எவனாவது என்னிடம் கேட்டுக் கொள்ளாமல் உரக்கச் சிரித்தான், உரக்க அழுதான், தொலைந்தான் அவன்! நினைவிருக்கட்டும்!"

"மனிதர்களுக்கு மட்டுந்தானா இந்த உத்தரவு?"

"எல்லாருக்குந்தான்! அதிலும் உன்னைப்போன்றவர்களுக்கு!"

"என்னைப்போன்றவர்களுக்குஎன்றால்?"

"உன்னைப்போன்றவர்கள் என்றால், உனக்குத் தெரியவில்லையா? முட்டாள்! என் வார்த்தைக்கு எவன் கட்டுப்படவில்லையோ, என் அதிகாரத்துக்கு எவன் அடங்கி நடக்கவில்லையோ அவன் எல்லாம் உன்னைப் போன்றவன்!"

"மற்றவர்கள்?"

"மற்றவர்கள் என் சொல் கேட்பவர்கள்! என் ஆட்கள்! அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். கத்தலாம்! பாடலாம்! அதிர்வேட்டு முழங்குவதுபோல் ஓயாமல் ஒழியாமல் முழங்கிக்கொண்டே வேண்டுமானாலும் திரியலாம்!"

"சற்று முன் சொன்னீர்களே! பாடுபவன் முட்டாள்! பாட்டைக் கேட்பவன் சோம்பேறியென்று! இப்போது உங்கள் ஆட்கள் பாடலாம் என்கிறீர்களே!"

"டேய் எதிர்வார்த்தையாடாதே! ஒரு தடவை சொன்ன வார்த்தை சொன்னதோடு முடிந்துபோய்விட்டது!"

"ஆமாம், மனிதர்களுக்கு மட்டுமில்லை என்றீர்களே, பறவைகளை உங்களால் என்ன செய்யமுடியும்?"

"என்ன செய்யமுடியும் என்று கேட்காதே! நான் நினைத்தால் இதோ இந்தக் கணமே உத்தரவு போடுவேன்!"

"எப்படி உத்தரவு போடுவீர்கள்? குயிலே கூவாதே! கிளியே இன் தமிழில் எதையும் மொழியாதே! நாகணவாய்ப்புள்ளே நீ பேசாதே! உயரப் பறந்து, மகிழ்ந்து பாடித் திரியும் வானம்பாடியே, இனி நீ பாடாதே! என்று உத்தரவு போடுவீர்களா?"

"எதற்காக அந்த வீண் வேலையில் ஈடுபடவேண்டும் நான்! எதற்காகப் பாடாதே! கூவாதே! மொழியாதே! பேசாதே என்று நயந்து கூறிக்கொண்டு நிற்கவேண்டும் நான்! உடனே என் ஏவலர்களுக்கு உத்தரவிடுவேன், ஒரு வானம்பாடி வானில் பறக்காமல், பாடாமல் எல்லாவற்றையும் சுட்டு வீழ்த்திவிடுங்கள் என்று. ஒரு குயில், ஒரு நாகணவாய்ப்புள், ஒரு கிளி யார் கண்ணிலும் படக்கூடாது! எல்லாவற்றையும் அழித்து ஒழித்துவிடுங்கள் என்று ஒரு சின்ன உத்தரவுபோட்டு விடுவேன்! அத்தோடு அவ்வளவும் அழித்தொழிக்கப்பட்டுவிடுமே!"

"ஓகோ, அப்படியானால் காக்கை கோட்டான்..."

"நிறுத்து, நிறுத்து! காக்கை கரையும் ஒலி எனக்கு மெத்தப் பிடித்தது. வள்ளுவனும், பாரதியும் அந்த ஒலியின் இனிமையில் திளைத்துப்போய்த்தான் நல்லபடி அவற்றைப் புகழ்ந்து விட்டுப் போயிருக்கிறார்கள்!"

"அடடே! இப்படிக்கூடப் பெரியோர்களின் சான்றைத் துணைக்கு வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?"

"அதோடு கோட்டான்கள் கூவுவதை நான் கேட்டுவிட்டால் உணவின்மீதோ, இன்சுவை நீர்மீதோ எனக்கு விருப்பே செல்லாது. அந்தக் கூவலைக் கேட்டுக்கொண்டே இருந்துவிடுவேன் நான். அப்படியேதான் ஆந்தை அலறும் ஒலியும் என் உள்ளத்தைக் கவருகின்ற ஒலி! அவற்றோடுகூடக் கழுதைகளின் கத்தலும் வெறிநாய்களின் குரைப்பொலியும் எனக்கு மெத்தப் பிடித்தவை.

"இனி நீ நாட்டிலே பாடித் திரிய வேண்டுமானால், சாக்குருவியின் குரல் எடுத்துத்தான் பாடித்திரிய வேண்டும்! அப்போதுதான் உன்னைப் பாடுவதற்கு விட்டுவைப்பேன் நான்! இல்லையேல் நீ பாடமுடியாது! குரல்எடுக்க விடமாட்டேன் உன்னை நான்! 'உரிமை வாழ்வு' இனிமை வாழ்வு! சமநிலை வாழ்வு! சீர்நிறை வாழ்வு' என்றெல்லாம் குரல் எடுத்தாயோ, உன் குரல்வளையை

(12-ம் பக்கம் பார்க்க)

கல்வித்துறையா? கேலிக்கூத்தா?

[அன்பு]

கல்வித்துறையில்தான் ஆளும் கட்சியினர் ஆளுக்கொரு முறையிலும் ஆண்டுக்கொரு வகையிலும் குழப்பம் உண்டாக்கி 'அரசியல் விளையாட்டு' விளையாடுகிறுர்கள் என்ருல், கல்வி முறையிலும் ஒரு தனித்த நிலையான எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிற ஒரு நிலையை உருவாக்கத் தவறியிருக்கின்றனர்.

ஆதாரக் கல்வி முறை காந்தியடிகளோடு தொடர்புபட்ட ஒன்று; அந்த ஒரு காரணத்தினுலேயே அது அரசாங்கக் கொள்கையாகி கல்வித்துறையில் திணிக்கவேண்டும் என்ற அவசியம் தேவையில்லை! தந்தையின் அறிவுரைகளை எந்த வகையிலும் கடைப்பிடிக்காத ஒரு பிள்ளை, ஆண்டு தோறும் தந்தை இறந்த நாளன்று திவசத்தை மட்டும் தவருமல் நடத்தி வருவதே போன்று, காந்தியடிகள் அறிமுகப்படுத்திய எத்துணையோ கொள்கைகளைச் செயல்படுத்தவிரும்பாத காங்கிரசார் அவரது ஆதாரக் கல்வி, கதர் திட்டம் போன்றவைகளை மட்டும் சடங்குகளாகக் கருதிக் கடைப்பிடித்து வருகின்றனர்.

அணைக்கட்டுகளைப்பற்றியும், ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றியும் தெரிந்திருக்கும் குடிமக்களில் எத்தனை பேருக்கு இன்று ஆதாரக் கல்வி என்ருல் என்ன, எதற்கு என்ற அடிப்படைக் கேள்விகளுக்கே பதில் தெரியும் என்பது இன்றைய உண்மை நிலை. எனவே, இக்கல்வி முறையை மக்கள் விரும்புகிறுர்களா இல்லையா என்பது இதற்கும் அப்பாற்பட்ட பிரச்சினை.

பொதுமக்கள் கருத்தில் படாத, அவர்களின் ஏகோபித்த ஒப்புதலைப் பெருத ஒருமுறை என்பதிலிருந்தே, பதினைந்து ஆண்டுகளாக இத்திட்டம் சாதித்தது என்ன என்பது எல்லோருக்கும் விளங்குகிறது. உண்மையில்நியாயவாதிகளுக்கு இத்திட்டம் ஒரு காட்சிப் பொருளாகவும் காந்தியடிகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆட்சி நடத்தும் காங்கிரசுக்காரர்களுக்கு இது ஒரு சடங்கு முறைத் திட்டமாகவும் தான் உள்ளதே தவிர, உண்மையிலேயே இத்திட்டம் கல்வித்துறைக்கு எந்த அளவு பயன்பட்டிருக்கிறது என்ற கேள்விக்கே ஆதாரக்கல்வி தோன்றிய நாள் முதல் கேட்பவர்களுக்கு இன்று வரை விளக்கமான பதில் தரப்படவில்லை. இக்கல்வியைப் பெற்றவர்கள்தான் எந்த அளவுக்கு அதன்படி ஒழுகுகிறுர்கள் என்பதும் விந்தைக்கும் கேலிக்கும் உரிய நிகழ்ச்சியாகத்தான் உள்ளது.

கல்வித்துறையில் வீண் குழப்பங்கள், பலன் கிடைக்காத பணச் செலவுகள், பார்ப்பவர்களின் கேலிக்கு இலக்காகும் நடவடிக்கைகள் — சுருங்கக் கூறினுல், இவைகள்தான் இக்கல்வி முறையின் மூலம் நாடு பெற்று வரும் அனுபவங்கள்.

*

ஆதாரக் கல்விமுறை:

"ஒரு ஏமாற்று வேலை!"

"முழுதோல்வி!" "நம்மால் கடைப்பிடிக்க முடியவில்லை!" நமக்கு ஏற்றதல்ல!" "மேற்கொள்ளும், நடத்தும் அதிகாரிகளிடையே நேர்மை இல்லை!" "கடந்த 15 ஆண்டுகளில் இதைப்போல் வேறேதும் இத்தனை திருத்தங்களுக்கு ஆளானதில்லை!" "இம்முறையினுல் என்ன பயன் என்பதுபற்றி இது வரை அரசியல்வாதிகள் மனநிறைவு கொள்ளவில்லை!"

"நாட்டில் நல்ல ஆட்சி நடந்தால் தான் ஆதாரக் கல்வி முறையை வெற்றிகரமாக நடத்தலாம்!"

*

மேற்கண்ட கருத்துக்கள் அனைத்தும் வெவ்வேறு காலங்களில் சொல்லப்பட்டவை அல்ல. ஒரே இடத்தில் ஒரே நாளில் குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காகக் கூடிய பொறுப்புள்ள பதவியில் இருப்பவர் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.

மத்திய கல்வி மந்திரி ஸ்ரீ மாலி, துணைமந்திரி திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன், திட்டக் கமிஷன் உறுப்பினர்கள் ஸ்ரீமன் நாராயணன், கோசலா, முன்னுள் காங்கிரசுத் தலைவர் தேபர், ஆதாரக் கல்வி வல்லுநர்கள் அரிய நாயகம், இராமச்சந்திரன் ஆகியோர் கடந்த 10-ந் தேதி புது டில்லியில் ஆதாரக் கல்வியின் தேசியக் குழு ஒன்று கூடியபோது வெளியிட்ட உண்மை நிலைகள் மேற்கண்டவைகள்!

"ஆதாரக் கல்வி ஒரு ஏமாற்று வேலை" (Fraud) என்று குறிப்பிட்டது இன்றைய இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன். அவர்கள் ஆதாரக் கல்வி முறையை நிறுவிய ஓரிருவருள் ஒருவர். ஆதாரக் கல்வித்துறை வல்லுநர் அரியநாயகம் அவர்கள் தான் குடியரசுத் துணைத்தலைவரின் வாசகத்தையே இவ்வாறு மேற்கோள்காட்டிப் பேசியுள்ளார்!

"இக்கல்வி முறை ஒரு முழுத் தோல்வி! நம்மால் கடைப்பிடிக்க முடியாது!" என்று கூறியிருப்பவர் கல்வி அமைச்சர் ஸ்ரீ மாலிதான்!

"பொறுப்புள்ளவர்களிடத்தில் நேர்மையில்லை" என்று கூறியிருப்பவரும் ஒருகல்விவல்லுனர் இராமச்சந்திரன்—மத்திய துணை அமைச்சர் சௌந்தரம் இராமச்சந்திரன் அவர்களின் கணவர்,

"நல்ல முறையில் ஆதாரக்கல்வி முறை பரவவேண்டுமென்ருல் நல்ல முறையில் நிர்வாகம் நடைபெறவேண்டும்" என்று பேசி வருபவரும்அவரே தான். துணைவியார் அரசுக் கட்டிலில் இருப்பதனுல்தான் நல்ல நிர்வாகம் நடைபெறவில்லை என்பதை நம்பகமான வட்டாரத்தின்மூலம் தெரிந்துகொண்டார் போலும்!

அரசியல்வாதி என்ற முறையில், "அரசியல்வாதிகளை இத்திட்டம் கவரவில்லை" என்ற பொருளில் தேபர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொறுப்பிலுள்ளவர்கள், மக்களை ஒரு பொருட்டாகவே மதியாது முன்னுக்குப் பின் முரணுன கருத்தை வெளியிட்டுக்கொண்டு வரிப்பணத்தையும் துணிந்து விரயமாக்கிக் கொண்டுவரும் நிலைமை இத்துணைக் கண்டத்தில்தான் நாளுக்கு நாள் பெருகிவருகிறது.

ஆதாரக்கல்வி முறை:

1. கணிசமான அளவில் மக்கள் கருத்தைக் கவரவில்லை.
2. படிப்பவர்கள் உண்மை ஆர்வத்துடன் வருவதில்லை.
3. படித்து வெளியேறுபவர்கள் அதன்படி நிற்பதில்லை.
4. இக் கல்வி முறை இயக்குபவர்கள் பெரும்பாலோர் கொள்கைப்பிடிப்போடு இருப்பதில்லை.
5. மேலாக இம்முறையினால் மட்டுமே பெறமுடியும் என்ற வகையில் இம்முறைக்கு மட்டுமே உரித்தான சிறப்புக்கூறுகள் இருப்பதாகவும் தெரியவில்லை. இதனால் இந்தப் பெயரில் இப்படி ஒரு 'நாடகம்' தேவையில்லை.

என்ற கருத்துக்கள் அமைந்த எதிர்ப்பு இக் கல்வி முறை இயங்க ஆரம்பித்த ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே எழும்பியது. ஆனால் ஆட்சியாளரின் நோக்கம் இதை ஒரு வெளிவேடமாகக் கருதி நடத்தி வருவதால் எதிர்ப்பு அவசியத்தோடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் பொறுப்பில் உள்ளவர்களாலேயே மேற்கண்ட ஞானோதய மொழிகள் உதிர்க்கப்பட்ட பின்பாவது இனி மேற்கொள்ளவேண்டியன பற்றி புதிய சிந்தனை கொள்வார்களா என்பதுதான் நமது அவா. "நேர்மை இல்லை, இலாயக்கு இல்லை, ஏமாற்று வேலை" என்று ஏதோ துணிவில் ஊர் உலகமறிய சொல்லி விட்டும் இன்னும் எத்துணைக்காலம் இந்த நாடகத்தையே தொடர்ந்து நடத்தப்போகின்றார்களோ? கல்வித் துறையா? கேலிக் கூத்தா?

இறந்த சடலத்தை எத்துணைநாள் மூடிவைக்கமுடியும்!

★

ஆங்கிலம்

எழுதவும், படிக்கவும், பேசவும் தபால் மூலம் ஒரே வருடத்தில் இலக்கண ரீதியாக கற்றுக் கொடுக்கப்படும்.

மாதம் ரூ. 2/-

இலவச விபரங்களுக்கு இன்றே எழுதுங்கள்.

✱

குமரன் இங்லீஷ் இன்ஸ்டிட்யூட் திருப்பூர்.

10-ம் பக்கத் தொடர்ச்சி

முறித்துவிடுவேன் நான்! வெளியே உலவவிடமாட்டேன் உன்னை நான்! தொலைந்துவிடுவாய் நீ! இந்த நாட்டின் இன்றைய வாழ்வு அடிமை வாழ்வு என்று பேசுவதை விட்டுவிடு நீ! நானும் உன்னைச்சிறையிலிருந்து விட்டுவிடுகிறேன்! இந்த நாட்டை இன்று ஆள்பவன் அந்நியன் என்று சொல்வதை மாற்றிக்கொள் நீ! நானும் உன்னைச் சிறைபிடிக்காமல் வெளியுலகுக்கே நிரந்தரமாக மாற்றிவிடுகிறேன்! உம், சொல்! இப்போதே சொல்லிவிடு!"

சற்று நேரம் இப்படிப் பேசிய அந்த மூர்க்கன் திரும்பவும் வெறியில் தள்ளப்பட்டவனாகிக் குழறிக் குழறிப் பேசத் தொடங்கினான்.

"டேய்! நான் யார் தெரியுமா? நான்தான் இராசா! நான்தான் சட்டம் போடுகிறவன்!"

பாடல்வல்லான் அருகில் வந்து நின்று அப்படிக் கத்தினான் அவன்! அவன் வாயிலிருந்து அப்போதைக்கப்போது எச்சில் தெறித்து விழுந்தது. அழுகிப்போன பழவகையின் துர்வாடை அவன் பேசும்போது 'குப் குப்' என்று வெளிப்பட்டுப் பாடல்வல்லானை மூச்சுமுட்டச் செய்தது.

"டேய்! நான் யார் தெரியுமா? நான்தான் இராசா! நான்தான் சட்டம் போடுகிறேன்! இப்போது என்ன சொல்கிறாய்? என் கட்டளைக்குக் கீழ்ப்படிகின்றாயா, இல்லையா? நான்தான் இராசா! நான்தான் சட்டம் போடுகிறவன்!"

"உன் அதிகாரம் ஒரு வெறி நாய்! உன் சட்டம் ஒரு இழிந்த சாக்கடை! வெறி நாயைக் கண்டு அஞ்சினால், அஞ்சி ஓடினால் அது துரத்தித் துரத்திக் கடிக்கத்தான் வரும். அதை எதிர்த்துத் தாக்கிக் கொன்று தீர்ப்பதே நல்ல மனிதரின் செயல்! அதைத்தான் நான் செய்ய விரும்புகிறேன்! வெறி நாயை எதிர்த்துத் தாக்கும்போது சில வேளை அந்த வெறி நாய் பாய்ந்து பிடுங்கிவிடுவதும் உண்டு. அப்படி வெறி நாயின் பல் பட்டவன் மீள்வதில்லை என்பதையும் நான் நன்கறிவேன்! பலரைக் கடித்துக் குதறி உயிர் வாங்குவதற்கெனச் சுற்றித் திரியும் வெறி நாயை ஒருவன் தன் இன்னுயிரை ஈந்தேனும் கொன்று தீர்ப்பதையே மன்பதைமாட்டு யாருத அன்பு கொண்ட அறிவு சான்ற நல்லோர் விரும்புவர், ஏற்றுவர், போற்றுவர். அப்படி உயரிய ஒருவனாக மாறுவதையே நான் பெருமகிழ்வுடன் விரும்புகிறேன்! தெரிந்து கொள்! தெளிவற்ற போதையில் மூழ்கிக் கிடக்கும் பேதையே தெரிந்து கொள்!

"நீ காத்துவரும் தீச்சட்டம் ஒரு சாக்கடை என்றேன்! அந்தச் சாக்கடை தெருவெல்லாம் பரவி மாந்தர் அனைவரின் உடல் நலத்தையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றது. அதன் வழி உள்ளத்துக்கும் ஊறு புரிந்துகொண்டு கிடக்கின்றது. அந்தச் சாக்கடைக்குப் போக்கிடம் காட்டுதற்கு நான் முனைந்து முன் வந்து நிற்கிறேன். அதனால் என் உடல் தூய்மைகெட்டு, உடல் ஊறும் நேரலாம்! என் உடல் ஊறு உறுவதையோ, என் உயிர் பறி போவதையோ நான் பெரிதாக நினைக்கவில்லை! பலரின் உடல் நலம் பாதுகாக்கப் படுகின்றதே, அதன் வழி அன்னோர் உள்ள நலம் பெறுகின்றனரே,அதனையே நான் பெற்ற மிகப்பெரும் பேறாக எண்ணுகின்றேன்! எனவே, அவ்வழி செயல்பட நான் சிறிதும் தயங்கேன், தயங்கேன்! எதுவரினும், எதுகண்டும் அஞ்சேன், அஞ்சேன்!"

"அட அற்பப் பயலே! இவ்வளவு திமிரா உனக்கு! என் அதிகாரத்தையா வெறி நாய் என்கிறாய்! என் சட்டத்தையா சாக்கடை என்கிறாய். உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று உரக்கக் குரல் எடுத்துத் தன் கையிலிருந்த பிரம்பால் ஓங்கியடிக்கின்றான் அந்த மூர்க்கன் பாடல் வல்லானை. அந்த அடி சுளீர் என்று பாடல்வல்லான்மீது படுகிறது. வலி தாங்கமுடியவில்லை பாடல்வல்லானால். திரும்பவும் ஓங்கி ஒரு அடி அடிக்கிறான் அந்த மூர்க்கன். அது அவன் தலையிற் படுகிறது! பட்டென்று அந்த அடி அவன் தலையிற் பட்டதும், சட்டென்று குருதி அங்கிருந்து கொட்டுகின்றது. குருதி கண்ட பின்னரே மூர்க்கம் பெரிது கொண்டு விட்டவனானான் அந்த மூர்க்கன். பின்னும் ஓங்கி, ஓங்கித் தலை, முகம், கை, கால், அரை தொடை என்று எவ்விடமும் எஞ்சுதலின்றி பாடல் வல்லானின் உடல் எங்கெங்கும் அடிகள் சோனை மாரியென விழுகின்றன. அதோ கீழே விழுகிறான் பாடல் வல்லான் மூர்ச்சை போட்டு.

அவ்வேளை,

அங்கே அமைச்சர் பெருமகனார் வருகின்றார்.

(அடுத்த இதழில்)

இளைய பரம்பரையே! எழு!

—[லிடியா]—

அடிமைத்தனம் என்ற சொல்லுக்கு —கைதியாகிச் சிறைப்படுவது, பிறரின் கட்டுப்பாட்டில் வாழ்வது, பிறருக்கு எடுபிடி வேலை செய்வது, பிறரின் எண்ணத்துக்கும் இயக்கத்துக்கும் இசைய இயங்குவது, தன்னிடமுள்ள எதிர்க்கும் ஆற்றலை முற்றிலும் இழந்துவிடுவது, தான் எண்ணுவதை வெளியிட இயலாதிருப்பது — என்ற பொருள்களைத்தான் அகரவரிசை நூலில் காணமுடியும். ஆனால், இவற்றைவிடப் பெரிய அடிமைத்தனம் நம்மை நாமே அடிமையாக்கிக் கொள்வதுதான். நம் உள்ளத்தில் அச்சத்தை வளர்ப்பதும் வாழவிடுவதுமே பெரிய அடிமைத்தனம். நம் மனத்தின் அடிமைத்தனம்.

ஒரு நாட்டு மக்களின் உள்ளங்கள் அச்சத்தினால் அடிமைப்பட்டுள்ள வேளையில்தான், மாற்றான் அந்நாட்டை எளிதில் வெல்கிறான்; ஆள்கிறான். இந்நிலையில்தான் நம் வரலாற்றை, நம் பழம்பெரும் நாகரிகத்தை, நம் அறவழிப் பண்பை, அடகு வாங்கிக் கொண்டார்கள் தில்லி அரசினர்—இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரால். நம் உள்ளத்தில் அச்சம் என்னும் இருள் கப்பிக் கொண்டிருக்கும் வரை, நம் அடகுப் பொருளை நாம் மீட்க முடியாது. விடுதலை ஒளியைக் காணமுடியாது. இந்திய ஒருமைப்பாடு என்ற மாயையில், கானல் நீரில், பொய்த்தேரில், இல்லாத ஒன்றில், இருக்க முடியாத ஒன்றில், இயற்கைக்கு மாறான ஒன்றில் நம் திராவிடத்தைச் சேர்ந்த பிற கட்சியினர் ஏமாந்துவிட்டனர். அவர்கள் அயர்ந்து தூங்குகின்றனர். நம்மால் எழுப்பப்பட முடியாத பெருந் தூக்கத்தில் ஆழ்ந்துகிடக்கும்படி பதவிப்போதை தரப்பட்டிருக்கிறது அவர்களுக்கு. எனவே, அவர்களின் துணை கொண்டு நம் விடுதலையைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. எனவேதான் நாம், திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாம் மட்டும் இப்பெரும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இது இளைய பரம்பரை. தந்தைக்குப் பிந்திய தனயனின் பரம்பரை. தனயனின் தலைமையில் நம்பிக்கை கொள்ளும் புதிய பரம்பரை. அச்சம் நீங்கிய அறிவுப் பரம்பரை. திராவிட விடுதலையை, விடுதலையின் அவசியத்தை, எடுத்துக்கூறும் பரம்பரை. விடுதலைக் கீதம் இசைத்து விடுதலைப் போரில் உயிர்கொடுக்கக் காத்திருக்கும் வீரப் பரம்பரை. வெற்றிப் படை. நீங்களும் நானும், மாணவரும் மாணவிகளும், வயலில் உழுவோர், ஆலையில் வேலை செய்வோர், அலுவலகப் பணி புரிவோர், அங்காடியில் பொருள் விற்போர், பட்டறையில் பாடுபடுபவர் காவலர் சேவகர் எல்லோருமே ஈடுபடக்கூடிய இந்நாட்டு இளைய பரம்பரை. அச்சமற்ற ஆண்மையுற்ற பரம்பரை. இவ்விளைய பரம்பரையில் பிறந்தும் நம் படையில் சேராத தோழரை நாம் அழைப்போம். அவர்களும் இப் பரம்பரையினரன்றோ?

நாடு வேறு; அரசு வேறு. நாடு என்பது நாமே — மக்களே. அரசு என்பது ஆள்பவர்—நிர்வாகம். மக்களுக்காகவே அரசு. இதுவே குடியரசு. முறைப்படி ஆளப்படுகின்ற ஒரு குடியரசில், மக்களது பேரெண்ணமே அரசோச்சும் இயந்திரத்துக்கு இயக்கும் ஆற்றலாக இருக்கும். ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தின் மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் நடப்பது என்ன? அரசு, நாட்டுக்கு — மக்களுக்குப் பணிய மறுக்கிறது. மக்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்க மறுக்கிறது. அதன் விளைவுகளின் ஒன்றுதான் ஜூலை 19. அதன் விளைவு, ஆளும் கட்சியாக இருந்தும் துணைத் தேர்தலில் தோல்வி இன்ன பிற. நாடும் அரசும் தூய்மையடையும் வரை, இணையும்வரை, வரலாற்றில் இப்படிப்பட்ட போராட்டங்கள் மீண்டும் மீண்டும் தோன்றும். தமிழகத்தில் ஆளும் கட்சிக்கோ, அக்கட்சியினருக்கோ, உள்ளத்தில் தூய்மையுமில்லை, வீரமுமில்லை. தமிழகத்தின் பெரும்பாலான மக்களும் அப்படியே. மறத்தை, அச்சத்தை, கோழைத்தனத்தை, பண்புக்கொவ்வாததை, அநீதியை ஏற்றுக்கொள்ளும் உள்ளமே நம்மில் பலருக்கு, குறிப்பாக நம் இயக்கப் பற்றில்லாத பல தமிழருக்கு இருக்கிறது. அவர்களைத் தூய்மைப்படுத்துவோம்; தட்டி எழுப்புவோம். அவர்கள் அஞ்சுகின்றனர்; தன்னலக்காரராகிவிட்டனர். பசுவைப் போலாகிவிட்டனர். நாம் யார் என்று உணர்ந்தால், நாம் எந்த நாட்டினன், எந்த வரலாற்றுப் பரம்பரையினர் என்பதை அவர்கள் அறிந்தால், அவர்களின் அச்சம் அகலும். அவர்களைப் பக்குவப்படுத்துவோம். நம் விடுதலை இயக்கம், அறிவின் இயக்கமாகவும், தூய்மைப்படுத்தும் இயக்கமாகவும் இருக்கட்டும். இளைய பரம்பரையினருக்கு இப்பணியும் நற்பணியே. இளைய பரம்பரையே திராவிடத்தைப் பெறும். ஜப்பானில், சீனாவில், கொரியாவில், அன்றைய இளைய பரம்பரைதான் விடுதலைப் போரில் வெற்றி கண்டது. முதிர் வயதுள்ளவரின் காட்சி அறிவும், இளைய பரம்பரையினரின் உள்ளத் துணிவும் கூடும் பொழுது, கூட்டப்படும் பொழுது, நான்கும் மூன்றும் கூடினால் ஏழு என்பது எவ்வளவு உண்மையோ, எவ்வளவு நிச்சயமோ, அப்படியே திராவிடத்தின் விடுதலையும் உண்மை நிச்சயம். நம் கொள்கையையும் குறிக்கோளையும் விட்டுக்கொடுக்காமல் நம்மையும், நம் குடும்பப்பற்றையும் விட்டுக்கொடுப்போம். இலட்சியத்தைத் தொழுவோம்,

பள்ளிகளில் மாணவர்கள் கோழைகளாக்கப்படுகின்றனர். தமிழகத்து இளம் உள்ளங்களில் நாட்டுப்பற்றுப் பறிக்கப்படுகிறது. அதன்மூலம் மொழிப்பற்று, இனப்பற்று, வரலாற்றுப்பற்று எல்லாமே பறிபோகிறது. தில்லி அரசின் இயக்கப் பாவையாக உள்ள தமிழக அரசு, தமிழ்நாட்டில், தமிழ்ப்பள்ளிகளில், தமிழ்நாட்டைப்பற்றி, தமிழ் உணர்வோடு பாடம் படிப்பிக்கக் கூடாது என்று தடைசெய்ய முற்படுகின்றது. அது குறுகிய எண்ணமாம்! பிரிவினை எண்ணமாம்! தாயின் வயிற்றிலிருக்கும் காலம் முழுமையான பின்னும், குழந்தை, தாயின் கர்ப்பத்தை (சூலை) விட்டுப் பிரிந்து வெளியே வருவது தீமை பயக்கும் பிரிவினையென்றால்; வயலில் நடப்பட்டு வளமடைந்து பலனளிப்பதற்காக நாற்றுங்காலின் நெருக்கமாயுள்ள நெற்பயிர் பிரிக்கப்படுவது தீமை பயக்கும் குறுகிய எண்ணங்கொண்ட பிரிவினை என்றால்; அழகிய மங்கையின் கழுத்தை அணி செய்வதற்காக ஆழ்கடலின் சிப்பியிலிருந்து முகத்தைப் பிரிப்பது தீமைபயக்கும் பிரிவினை என்றால், திராவிடப் பிரிவினையும் அப்படியே! பயன்விளைக்காத ஒற்றுமையை விடப் பயன்விளைக்கும் பிரிவினை நன்றே. அநீதிக்கும், தீங்கரசுக்கும் பணிவதைவிட அவற்றை எதிர்க்கும் எதிர்ப்பு நன்றே. கொள்கைக்கு அடங்குவோம்; கொடுமைக்கு எதிர்த்துக் குமுறுவோம். நம் உரிமையை அழிக்க நம்மவரையே பயன்படுத்தும் பேரரசின் கெட்ட எண்ணத்தை மாற்ற எழுவோம். தனிப்பட்ட முறையில் எந்தத் தலைவரும் நம் பகைவரல்லர். நம் நலனுக்கு மட்டுமா விடுதலை கோருகிறோம்? இன்று நம் இயக்கத்தில் உறுப்பினராகவும் நல்லெண்ணம் கொண்டவராகவும் உள்ளவர்க்கு மட்டுமா விடுதலை கேட்கிறோம்? தமிழக அரசு இதை இன்னும் உணரவில்லையே! இளைய பரம்பரை இதனை எண்ணவேண்டும்!

நாம் விடுதலை விரும்புகிறோம். கேட்கிறோம். ஏன்? அதன் வழி கறைபடிந்த — களங்கமுள்ள தன்னல வளர்ச்சி பெறவா? அல்லது வறட்டுப்பெருமைக்காகவா? இன்று நமக்கு மறுக்கப்படும் உரிமைகளைப் பெற்று வாழ, நமக்கும் கிட்டாத வாய்ப்புக்களை உண்டுபண்ண, அதன்வழி மன்பதைப் பணிபுரிய. மன்பதை வாழ, பிற மனித இனங்களோடு நல்லெண்ணம் பரிமாற, நம்மால் அவர்களுக்கு இயன்ற பணிபுரிய நமக்கு விடுதலை தேவை. இளைய பரம்பரையினராகிய நாம், இப்பரந்த குறிப்பை மனத்தில் கொண்டு விடுதலைப்போரில் இறங்குவோம். திராவிடம் இன்னும் அழியாது நிலைத்திருப்பதற்குக் காரணம், அது பண்டுதொட்டே 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற விரிந்த பெருங்கொள்கையைப் பிடித்துக் காத்து வருவதுதான். இதே கொள்கையுடன் நம் நாட்டுப் பற்றுக் குறையாமல் நாம், நம்நாட்டில் அன்பு கூறும் வரை திராவிடம் வாழும்; வளரும். கலகத்துக்கும், வெறுப்புக்கும் இடம் கொடுக்காமல் நம்மைப் புடமிடும் எதிர்க்கட்சிகளின் தீய குணத்திற்குப் பலியாகாமல் அவர்களின் மயக்குத்திறனில் வீழாமல் விழித்தெழுவோம். வீட்டின் கூரை பற்றி எரிகின்றபோது, வீட்டுக்குள்ளே உறங்குகின்றவனுக்கு அது தெரியாது. வெளியிலிருந்து பார்ப்பவர்களே அறிவார்கள். நாம் வெளியிலிருந்து பார்க்கிறோம்; அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாம் பார்த்தால் மட்டும் போதாது. அவர்களை எழுப்பி, அவர்களுக்கும் காட்டி உணர்த்துவோம்.

ஆதிக்கவெறியும் அடக்குமுறையும் அரசினரின் பெருந்தவறு என்றால், அவற்றுக்கு அஞ்சுவது அதை விடத் தவறல்லவா? ஆம்! பலமற்றவராயிருக்கிறோம்; துணையற்றவராயிருக்கிறோம் என்று நம்மைத் தாழ்வாக எண்ணி அஞ்சுவது பெரும் பிழை. தில்லி அரசும் அதன் தாள் பற்றும் தமிழக அரசும், ஆணையும், ஆணையரும், பதவி மதுவைப் பருகிய வெறிநிலையில், நாம் பயங்கொள்ளியாக இருக்கும் நிலையையும் கண்டுதான் அடக்குமுறையை அவிழ்க்கின்றனர், நாம் எதற்கும் அஞ்சவில்லை என்பதை அரசுக்குத் தெளிவாகக் காட்டிவிட்டால் அரசே அஞ்சும். ஜூலை 19-ஒரு எடுத்துக் காட்டு. நாம் அஞ்சவில்லை என்பதற்கும் அரசு அஞ்சத் துவங்கி விட்டது என்பதற்கும் அது ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டு. திராவிடநாட்டுப் பிரிவினை அல்லது விடுதலைபற்றிய போராட்டங்கூட அல்ல அது. இந்நாட்டு மக்களின் வருவாயும், விலைநிலையும் மலையும் மடுவுமாயிருக்கின்றன. இதனால் தி. மு. கழகத்தினர் மட்டுமா துயர்ப்படுகின்றனர்? நமக்கு மட்டுமா அதிகவிலை கூறப்படுகின்றது? மக்களின் நல்வாழ்வில் கருத்துக் கொண்டுள்ள தி. மு. க. மக்களை நேராகத் துன்புறுத்தும் ஒரு தீவினையை அரசினருக்குத் தெரிவித்து ஆவன செய்யவேண்டும் என்ற விரிந்த எண்ணத்தால் செய்த ஒரு பொதுச்செயல். இதை ஒரு பயங்கரப் போராட்டம் என்று தவறாக எண்ணிய அரசு, தான் எடுத்த தடுப்பு முயற்சிகளால் தன்னைப் பலமிழந்ததாகக் காட்டிக்கொண்டுவிட்டது. அச்சத்தின் அறிகுறியை அரசிடம் காண்கிறோம். நாம் துவக்கவிருக்கும் விடுதலைப்போரில் இவர்கள் என்ன செய்வார்களோ? இளையபரம்பரையே! இந்த இடத்தை இந்த வேளையை நன்றாக எண்ணிப் பார்!

நமக்குத் தன்னம்பிக்கையுண்டு விடுதலை அடைவோம் என்பதில். இன்றோ, நாளையோ என்றோ ஒரு நாள் திராவிடக் குடியரசின் மகன்—மகள் என்பதில் பூரித்துப் பெருமையடையப்போகிறோம் நாம். 'திராவிட நாடு இல்லை, அது உருவாகாது' என்பதில் நம்பிக்கையுண்டா அரசினருக்கு? நிச்சயமாக இல்லை! நாளை இவர்களும் நம்மோடு சேர்ந்து திராவிடக் குடியரசின் நன்னாளில், திராவிட விடுதலைக் கொடியின் பேரொளி கூடிய மெல்லசைவில் இன்பமும் அமைதியும் காணத்தான் போகிறார்கள். இளைய பரம்பரையினர் குறள் வழி கற்பவர்; அறவழி காப்பவர். நம்முடைய பலம் பெருகப் பெருகத் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளும் நுண்ணறிவு இவர்களிடம் இல்லையே என்பதில் வியக்கிறோம். எனினும் விரைவில் மாற்றிக்கொள்வார்கள் என்பதில் நம்புவோம். நம் நல்லெண்ணத்தாலும், நற்செயலாலும் அறவழியாலும் திராவிடத்தை நாம் பெருமைப்படுத்தினால் அவர்கள் புரிந்துகொள்வார்கள். 'பதவிக்கும் பட்டத்துக்கும் பணத்துக்கும் பண்டமாற்றுப் பொருளல்லத் திராவிடத்தின் பெருமை' என்பதை இளைய பரம்பரை உணர்கிறது. காங்கிரசுத் தோழர்கள் இன்னும் உணரவில்லை. இளைய காங்கிரசும் உணரவில்லை. அவர்கள் செய்யும் பண்டமாற்றுக்கு நாம் வெட்கப்படுகிறோம். தலைகுனிகிறோம். என்ன வந்தாலும் சரி! இவ்விழிசெயல் செய்யாதே! என்று அவர்களைக் கேட்போம். "செந்தமிழ் நாட்டுப் பாடம் வேண்டாம்! தனித்தமிழ் நாட்டுப் படம் வேண்டாம்! தமிழன் என்று சொல்லாதே! தலைநிமிர்ந்து நில்லாதே! தமிழ் இலக்கியத்தைப் பரப்பாதே! தமிழ்

மொழியை வளர்க்காதே! தமிழ்ப் பண்பு என்று கூறாதே! எங்கள் சொற்படி கேள்! உன் தமிழை விற்றுவிடு! விட்டுவிடு!...... இதோ! இதைப்பெற்றுக்கொள்! ஒருஅமைச்சர் பதவி! ஒரு 'பத்மபூஷண்'! ஒரு அயல்நாட்டுப் பயணம்!'' எப்படிச் சோதனை? எப்படி மருட்சி? இந்த ஆசை வலையில் வீழ்ந்த தோழர்களிடம் கூறுவோம். இன்று இளங்கோவும், கூத்தனும், சாத்தனும், திருவள்ளுவரும், சயங்கொண்டாரும் நம்மிடையே இல்லை. இருந்தால் நல்ல பாடம் கற்றுத் தருவார்கள் இவர்களுக்கு. எனினும் நாமும் நம்மாலியன்றவரை கூறுவோம். பகைமை பாராட்டாமல் பண்போடு எடுத்துச் சொல்வோம். ஏன் அவர்களை வெறுக்கவேண்டும்? விடுதலை நாட்டில் அவரும் நாளை ஓர் உறுப்பு. திராவிடம் பிரிந்த பின் தன் பெண்டு பிள்ளைகளுடன் அவர் என்ன வடக்கே சென்று இந்திய நாட்டிலா குடியேறிக்கொள்வார்? இல்லை! சொல்லப்போனால் நம்மிடம்நெருங்கி வருவார். தம் மகனுக்கு நம் மகளைப் பெண் கேட்டும் வருவார்! அந்த நன்னாளில்தான் நமக்குள் எத்துணை பிணைப்பு! எத்தனை இன்பம்! எனவே, இளைய பரம்பரையே! மாற்றாரை மன மார நேசிப்போம். நம்மைப் பகைப்பதாகத் தங்கள் 'எசமானருக்கு'க் காட்டிக்கொள்வதன் மூலம் அவர்களுக்கு இன்னுமொரு பங்கு கிடைக்கட்டும். நாம் அவர்களில் அன்பு கூறுவோம். அதில் நமக்குப் பெருமை; நம் நாட்டுக்குப் பெருமை. இன்று கட்சியின் பெயரால், அரசியலின் பெயரால் எதிர்க்கூடாரங்களில் இருக்கிறோம், ஆனால், கட்சிகளுக்கு அப்பால், அரசியலுக்கு அப்பால், கருத்து வேற்றுமைக்கு அப்பால் உள்ள நம் மரபு, நம் உறவு, நம் உணர்வு இவற்றைத் தீட்டுப் படுத்திக்கொள்ள வேண்டாம். இவை அழியாமை பெற்றது. மன்பதை உணர்வும், அன்பும், அறனும் இல்லாமல் இன்றைய உலகில் நாம் விடுதலையின் முழுமையைத் துய்க்க முடியாது.

எரிமலையும், பெருமழையும், கொடுங்காற்றும், நில அசைவும் முன்னறிவிப்புக் கொடுப்பதில்லை. விடுதலையும் அப்படித்தான்! விடுதலைப் போரும் அப்படித்தான்! எப்பொழுதும் தயாராக இருப்போம்! விடுதலை என்று கிடைக்கும்? நாளையா? அடுத்த திங்களா? 1965ல் பெறுவோமா? இல்லை கி. பி. 2000 ஆகுமா? நேரு ஐரோப்பா சென்று மீண்ட உடன் ஒப்பம் தருவாரா? இரஷ்யர் சந்திரனில் இறங்கிய மறு நாளில் திராவிடம் விடுதலை அடையுமா? தெரியாது! சொல்லமுடியாது! ஒரு நாட்டின் விடுதலை நாளை முன்கூட்டிக் காட்டும் பஞ்சாங்கம்–காலக்குறிப்பு இன்னும் வரவில்லை; வரமுடியாது. திராவிடத்தின் விடுதலை அண்மையில் இருக்கலாம்; சேய்மையில் இருக்கலாம். உலகின் மாறுபாடும் புதிய ஆற்றலுக்கியைய நாம் இணங்கிச் செல்வதிலும், நம் ஒன்றிப்பிலும், நம் பண்பிலும், அறவழியிலும் எல்லாவற்றிற்கும் மேலாக நம் தியாகத்திலும் அது அடங்கியுள்ளது. நாம் பெறுவோம் என்பது உறுதி. விரைவில் பெறுவோம் என்பதற்கான அறிகுறிகளையும் காண்கிறோம். நம் கழகத்திலிருந்து தில்லிக்கு ஒன்பதின்மர் சென்ற உடனேயே 'பாரத தேவி' இரண்டாம் முறையாகக் கருவுற்றிருக்கிறாள். திராவிடத்தை அவள் பெற்றே தீரவேண்டும். நம் இளைய பரம்பரை அதைக் காணும்; பேணும். நாம் விழித்திருப்போம். நம் எண்ணத்தில் தூய்மையுடன் திராவிடத்தைக் காப்போம். நாம் விரும்பும், நாம் காட்டும் விடுதலை வீடு, நம்மால் மட்டும் களிக்கப்படுவதற்காக ஏற்படும் சிறு குடில் அல்ல; அது ஒரு உயரிய, வலுவான, பலகணிகளும் பெருவாயிலும் நிறைந்த ஒளி மயமான, மன்பதை உணர்வெனும் சீர்மணம் பரவும் பெரிய மாளிகை. எனவே, இளைய பரம்பரையே! எழு! விழித்திரு!

நம் பெரும் தலைவர்களின் நெறி பிறழாத தலைமையில் நம்பிக்கை வைத்துள்ள புதிய சந்ததியே! புத்துணர்வு கொள்! வரலாற்றின் பொன்னேடு வாவென்றழைக்கிறது உன்னை! உன் இளங்குருதியின் வெதுவெதுப்பில் திராவிட விடுதலைப் பாட்டின் தாள நயத்தை நான் உணர்கிறேன். இன்னும் கருமையடையாத–ஆனால் வெளிக் கிளம்பிவிட்ட, உன் அரும்பு மீசையின் மினுமினுப்பில் திராவிட விடுதலை உணர்வு அரும்புவதைக் காண்கிறேன். என் உள்ளம் பூரிக்கிறது. இளைய பரம்பரையே! எழு!

நீ அலுவலுக்குச் செல்லுமுன் பிரித்துப் பார்க்கும் செய்தித்தாளில், ஆளும் கட்சியினரின் அடக்குமுறையைப்பற்றிப் படித்ததும் நீ ஏளனத்தால் சிரிப்பதும், உரிமை உணர்வால் உன் உள்ளம் விம்முவதும் தாழ்வதும் கண்டு என் கண்களில் இன்ப நீர் பெருகுகிறது. இளைய பரம்பரையே எழு!

அலுவலகம் சென்று பணி புரியும் போது, ஆளும் கட்சியினரின் முத்திரையுடன் வந்த மமதையால், உன்னை ஏளனமாக எண்ணி, அடிமையெனக் கருதி, உன்னை மிரட்டி, உன்னை ஏவி, உன் வழி, தன் காரியத்தை முடித்துக்கொண்டு உன் பசி வேளையையும் அறியாத 'பெரு மகன்' செல்வத்தைக் கண்டு நீ பெருமூச்சு விடுவதையும், அதன் வெம்மையையும் நான் உணர்கிறேன். உன்னோடு ஒத்துணர்வு கொள்கிறேன். உனக்கு நம்பிக்கை ஊட்டுகின்றேன். இளைய பரம்பரையே! எழு!

வரலாற்றுநூலைக்கைகளில்ஏந்தி, இந்நாட்டில் நாம் வாழ்ந்ததைப்பற்றியும், பிறர் வந்ததைப்பற்றியும், வந்தவர் வாழ்ந்தவரை வஞ்சித்த வகைபற்றியும், வாழ்ந்தவர் தாழ்ந்த நிலைபற்றியும் உன் உலகுக்குக் கூறத் துடிக்கும் உன் உதடுகளைச் 'சட்டம்' எனும் ஊசி தைத்துவிட்டதால் நீ துடிப்பதை உணர்கிறேன். 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே, ஒரு தேள் வந்து கொட்டுது மார்பினிலே' என்றுதான் கற்றுக் கொடுக்கவேண்டும் என்று அரசின் சட்டம் உன் நெஞ்சத்தில் கொக்கி போடுவதால் நீ புழுவெனத் துடிப்பதையும் உணர்கிறேன். ஏன் நீ துடிக்கவேண்டும்? துவள வேண்டும்? துயருற வேண்டும்? இளைய பரம்பரையே எழு!

கல்லும் முள்ளுமாய் இருந்ததைக் கழனியாக்கி, அதில் நெல்லும் கரும்பும் நீ விளைவித்து, வந்த விளைவெல்லாம் எங்கோ சென்றுவிடுவதால் சர்க்கரை என்பதைக் கண்ணால் கூடக் காணமுடியாமல், அரிசிச் சோற்றைக் கலத்தில் கண்டு களிக்க முடியாமல் ஊமையாய், ஆமையாய், நெஞ்சத்து எண்ணத்தால் நீத்த சுண்ணமாய் நீயுருகி, எலும்புருவாய் இருப்பதைக் கண்டு உன் வயதான பெற்றோரும் உனக்கு வந்தவளும் வாடுவதை அறிகிறேன்! நீ ஏன் வாடவேண்டும்? இளைய பரம்பரையே! எழு!

திராவிடத்தில் எத்தனை கோடிப் பணத்துக்கு 'கார்டு, கவர் தபால் தலைகளை விற்கிறாய்? இரயில் பிரயாணத்தினால் வருமானம் எவ்வளவு? சுங்கப் பணம் எங்கே? இவை யாவும் எங்கே? எப்படி? ஏன் போகிறது? என்பதை எண்ணி வியக்கிறாய்! நீ தேடித்தரும் பணத்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

துக்காக ஊதியம் என்ற பெயரில் 'கூலி' வாங்குகிறாய் என்பதை உணரும் நீ, உன்னால் சேர்க்கப்பட்ட பணம் தில்லி சென்று விரயம் ஆகிறதை எண்ணி அழாக்குறையாக அடக்கிக்கொண்டு அடங்கிக் கொண்டு இருக்கிறாய். உன் தேவையில் நெருக்கடி ஏற்படும்பொழுது மட்டும் பொங்குகிறாய்! பொருமுகிறாய்! அதையும் நான் உணர்கிறேன். ஏன் பொங்குகிறாய்? என்னோடு வா! இளைய பரம்பரையே! எழு!

காலை முதல் மாலையிலும் இரவிலும்கூடக் காலும் கையும் வலிக்கப் பாவு இட்டுப், பிணையடித்து, இழை கோதித் துணி நெய்து, அறுத்துக் கொடுத்துவிட்டு 'அற்றைக் கூலி' வாங்கிக் கூழுக்குச் செலவு செய்யும் உன் பஞ்சை வாழ்வுக்கு ஒரு மலர்ச்சி கிடையாதா? என்று ஏங்குகின்றாய்! ஏன் இல்லை மறு வாழ்வு? என்னோடு வா! இளைய தலைமுறையே!

செங்கல் அறுத்தாய்! சூளை வைத்தாய்! உன் சிற்பத் திறன் காட்டி ஏழடுக்கு மண்டபம் சமைத்தாய்! அம்மாளிகையின் 'மல அறை' அளவுமில்லாத மண் குடிசையில் உன்னை நம்பித்தான் எத்தனை உயிர்கள்! உன் சமையலறை, படுக்கை அறை, உன் மனைவிக்கும் உன் மகளுக்கும் மகப்பேற்று அறை, உன் உணவறை, உடையறை; ஓய்வறை எல்லாம் 'அதே'யாக விளங்கும் அந்தப் பிளவுபட்ட நான்கு சுவர்களையும், இடைவிட்ட கூரையையும் எண்ணி எண்ணி உன் நெஞ்சு கூடாகிவிட்டதை என் விரல்களால் தடவிப் பார்க்கிறேன்! நீ நலிகிறாய்! ஏன் நலிய வேண்டும்? மெலிய வேண்டும்? முப்பதும் முடியாத உன் உடல் முதுமைத் தோற்றம் கொடுப்பதைக் கண்டு வருந்தாதே! வா என்னோடு! புது வழி! அங்கே புத்தொளி! இளைய பரம்பரையே! எழுந்து வா! ஒன்றுபடு! திராவிட விடுதலைப் போர் முரசு ஒலிக்கும் நாள் நெருங்கிவிட்டது! உன் சேவை தேவை! உன் உயிர் தேவை! அதைக் கொடு! நம் உயிர் ஒன்றினால் மட்டுமே திராவிடம் விடுதலையடைய முடியும்! நம் பின் வரும் அடுத்த தலைமுறையாவது விடுதலை வாழ்வு வாழட்டும்! வளரட்டும்! பலிக்களம் நம்மை அழைக்கிறது! வெற்றி நமதே! ஆனாலும் போருக்குப் பின்னர்தானே வெற்றி. எனவே போருக்கு—அறப்போருக்குப் புறப்பட எழு! இளைய பரம்பரையே எழு!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

கூடல் நகரின் பெருமையையே கூடலுக்கும் பெருமையாக்கிய உங்களுக்கு நான் என்றும் அடிமை என்றேன்.

அதைவிடு; இப்பொழுது சொல் கூடலுக்குப் பெருமை எது? என்று கேட்டார்.

முகத்தை மூடியபடி 'கூடலுக்குச் சிறப்பு வை கை என்றேன் நான்! என் கன்னத்தைத் திருகியபடி கைகளை விலக்கியபடி "கூடலுக்குச் சிறப்பு இந்தப் பொய் கை என்றார் அவர்''

இப்படியெல்லாம் அறிவுத் திறம் படைத்த அந்த அழகுத் தலைவனைத் தாண்டி; நான் பார்க்கக்கூடாது என்று என் தாய் ஆணையிட்டு, அறைக்குள்ளே போட்டுப் பூட்டிவிடுகிறாள் அவர் நகர் வலம் வரும் நேரம் பார்த்து.

என்ன கொடுமை தலைவியிது!

உனக்கும் எனக்கும்தாண்டி கொடுமையாகத் தெரிகிறது! என் தாய்க்கு அதுதானே மகிழ்ச்சியைத் தருகிறது.

ஒரு நாள் மாலை அவர் நகர் வலம் வருகின்றார் என்பதை அவர் தேரின் ஒலி கேட்டுத் தெரிந்துகொண்டேன் நான். பார்க்காவிட்டால் என் உயிர் பிரிந்துவிடும் போலிருந்தது! அறையின் எல்லாப் பக்கங்களிலும் ஓடி ஓடித் தேடியலைந்தேன்!

கிடைத்ததா தலைவி வழி!

கிடைக்காமலா தோழி போகும்!

பூட்டிய அறையுள்ளும் வழியிருந்ததா? தலைவனைப் பார்த்தீர்களா? என்ன வழியது! தயை செய்து சொல்லுங்கள் தலைவி!

என்னடி தோழி உனக்குமா இந்த வழி தேவைப்படுகிறது?

ஆம் தலைவி! என் தாயும் உன் தாயைப் பின்பற்றுகிறாள் இப்பொழுதெல்லாம்!

நான் சொல்லுமுன் என் தாய் எங்கே இருக்கிறாள் என்று பார்! நான் சொல்கின்ற போது அவள் காதில் விழுந்தால் இந்த வழியும் அடைபட்டுவிடும்!

அவள் உள்ளே இருக்கிறாள் சொல்லுங்கள் தலைவி!

கதவு இருக்கிறதே தோழி! அந்தக் கதவில் பூட்டுத் துளையிருக்கிறதே அந்த துளை வழியாகப் பார்த்தேன்! யாரிடமும் சொல்லிவிடாதே! போ! போ! நாளை முதல் உன் தலைவனைப் பார்ப்பதற்கும் நான் கண்ட வழியில் நீ சென்று மகிழ்! முதலிலே கதவினைச்செய்த தச்சனுக்கு நன்றியை சொல்லிக்கொள்! அவன் செய்த இந்த அறம்வாழி! நீடூழி!

என்ன அதற்குள் பிரிந்துவிட்டார்களே என்று வருந்தாதீர்கள்! இதோ அவர்கள் அடக்கிவைத்திருக்கும் முத்தொள்ளாயிரம் எனும் வைர மணிப் பேழை! திறவுங்கள் அதனுள்ளே இதுபோன்ற தலைவியர்கள் பலருண்டு கண்டு களியுங்கள்:

"காப்படங்கென்று அன்னை கடிமனையில்
செறித்து
யாப்படங்க ஓடி அடைத்தபின்—
மாக்கடுங்கோன்
நன்னலம் காணக் கதவம்
துளைதொட்டார்க்கு
என்னகொல் கைமாறு இனி."

—முத்தொள்ளாயிரம்

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.